பதிவு எண் 2041

தனிப் பிரதி விலை { உள் நாடு 1 அணா
{ வெளி நாடு 1½ அணா

# குடி அரசு

வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா „ ... ரூ 1–12
வெளி நாட்டிற்கு „ ... ரூ 4—0


வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி வீகிதம்

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஸ்ரீ மார்கழி மீ 17வ (1—1—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 36

இனம்! இனம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—

20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2—0—0
10 „ „ ரூ. 1—4—0
காட்டுக் காய்கறி 20 ரூ. 2—8—0

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்னர்சஜி தோட்டம், சேலம்.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனம்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
{ ..., ... 3, பார்க் டவுன், (தா) சென்னை.

## இந்தியாவின் பூர்வீக மறை ஆராய்ச்சிக்குரிய சிறந்த நூல்கள். மதசீர்திருத்தக்காரர்களும் தமிழபிமானிகளும் அவசியம் பார்க்க வேண்டிய புத்தகங்கள்.

இந்திரர் தேச சரிதை— ஆரியர் நமது தேசத்தில் வந்து தேசத்தையும், மதத்தையும், மக்களையும், பாழ்படுத்தியதை விவரித்துள்ளது 0—8—0
விசேஷ சங்கைத்தெளிவு 100 அவசியமும் அருமையுமான சங்கைகளை விளக்கியுள்ளது 0—8—0
திருவள்ளுவர் உண்மை சரிதமும் அவரது மதமும் 0—2—0
திராவிடர் பண்டிகைகளின் விளக்கம் 0—2—0
திராவிடர் விவாகங்களின் விளக்கம் 0—2—6
கிராம தேவதையான அம்பிகையம்மனின் சரிதை 0—1—6
ஸ்ரீ கஜமுகனின் உண்மை சரித்திரம் 0—1—6
ஸ்ரீ முருகனின் உண்மை சரித்திரம் 0—1—6
அரிச்சந்திரனின் உண்மை சரித்திரம் 0—1—6
புத்த தருமோபதேச அநுஷ்டான நியமம் 0—1—0
வஜ்ஜிரசூசி என்னும் ஜாதி கண்டனம் 0—1—0
நந்தன் சரித்திர விளக்க வினு விடை 0—2—0
யதார்த்த வேஷ பிராமணர் வேதாந்த விபரம் 0—4—0
நூதன ஜாதிகளின் உற்பவ பீடிகை 0—4—0
கிகழ்காலத்திரங்கலும் பெருங் குறவஞ்சியும் 0—2—6
விபூதி விளக்க வொளியும் கபோலீசர் விபாமும் 0—0—6
பூர்வத்தமிழொளியாம் ஸ்ரீ புத்தரது ஆதி வேதம். தமிழில் இதைவிட சிறந்தநூல் வேறு கிடையாது கவிகோ பைண்டுசெய்த பெரிய புத்தகம் 3—0—0
புத்தமார்க்க வினு விடை 1 & 2 0—5—0
அசோக சரித்திரம் 0—4—0
வருணபேத விளக்கம் 0—4—0
ஸ்ரீ அம்பிகையம்மன் அருளிய திரிவாசகம் 0—6—0

ஸ்ரீ ஸித்தார்த்தா புத்தக சாலை
சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்
கோலார் கோல்ட் பீல்ட்.

Sri Siddhartha Book Depot
Champion Reefs P.O.
Kolar Gold Field S. I.

## நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று



அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதாராஸ்.

இனம்! இனம்!!

சாரவிவேகி சதாநந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனுன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சர்து இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

## கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னொன்று மவகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாகாமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

நே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இனம்! இனம்!! இனம்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப்பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனம்.

ஸ்ரீ கொக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மின்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியவையும் உடனாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்தன்னோம். ஆகார விஷயத்தில் யாதும் ஏற்பாடில்லை. எல்லா காலத்திலும் எல்லா வூரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. சித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்தவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, நடுவாதம், அஜீர்ணம் முதலியவைகளையும் நாசமாக்கிப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்ற பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வீ. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று கிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

# தேக ஆரோக்கியத்தைக் கவனியுங்கள்.

குளிர் காலத்தில் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாதது. குளிர்கால உபயோகத்திற்கென்றே நானாவிதமான கம்பளிப் போர்வைத் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். குளிர் காலம் ஆரம்பித்து விட்டதால் ஆர்டர்கள் குவிகின்றன. நீங்களும் உங்கள் ஆர்டரை அனுப்பிவிடுங்கள்

| | | | |
|---|---|---|---|
| செ. 1. | ஜெர்மன் கம்பிக்கலர்ப் போர்வை | 1 | ரூ. 9—8—0 |
| செ. 2. | பாரிஸ் பூக்கலர்ப் போர்வை | 1 | ரூ. 10—8—0 |
| செ. 3. | டை உயர்ந்தது பெரிய சயிஸ் | 1 | ரூ. 16—0—0 |
| செ. 4. | காஷ்மீர் கை நெசவுப் போர்வை | 1 | ரூ. 12—0—0 |
| செ. 5. | ஜெர்மன் மேகவர்ணப் போர்வை | 1 | ரூ. 15—0—0 |

கே. எஸ். முத்தையா அன் கம்பெனி, மதராஸ்.
K. S. MUTHIAH & Co, Export Dept., Post Box 99. MADRAS.

## ஆநந்த குணபோதினி.

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான் 5000-சந்தாதார்களுள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

## முத்து மாமா.

இரண்டாம்பதிப்பு.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

முன் விலை ரூ. 14 இப்போழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3½"x 2½" ஆகும். இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

# நீதி இலாகாவும் நிர்வாக இலாகாவும்

## வைதீக இலாகாவின் வழியே போகிறது.

### கைவல்ய சாமியார் எழுதுவது.

II

பிரசங்கித்து மானிட வர்க்கத்தின் நிலையை உயர்த்தச் சீர்படுத்த வேண்டும் என்ற கட்டளை எல்லா அறிவாளிகளுக்கும் இடப்பட்டிருக்கிறது. பிரசங்கம் செய்யும் பாத்யதையை நாம் ஆக்ஷேபிக்கவில்லை. அந்த பிரசங்கம் சத்தியமாகவும் ஞாயமாகவும் இல்லையென்றே "குடி அரசு" எடுத்துச் சொல்லுகிறது. அறிவுடைய நீங்களே அதைத் தெரிந்துகொள்ள வேண்டும். துன்பமும், அஞ்ஞானமும், ஞானக் குறைவும் எவ்வெவ்விடங்களில் இருந்த போதிலும், அவற்றிற்குக் காரணம் என்னவென்று விசாரிக்குங்கால், வேற்றுமை பாராட்டுவதாலேயே எல்லாத் துன்பமும் விளைகின்றனவென்று தெரிகின்றது. அத்துன்பம் மத சாஸ்திர சம்மதத்தோடு நீங்க வேண்டுமானால் எல்லாம் ஒன்றென்னும் சம திருஷ்டியால் சொல்லப்பட்டிருக்கும் சாஸ்திரங்களையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும். மற்றெல்லாக் குப்பைகளையும் தள்ளி விடவேண்டும். தேசத்திற்கும் சமூகத்திற்கும் நன்மை பயக்கும்படியாக எழுந்திருக்க விரும்பும் வீழ்ந்த ஜாதியாரை மேலெழாதபடி அழுத்துவதும், தம்மைக் காட்டிலும் மதப்பற்றுடையாருக்கு வலது கையாலே மதப்பிரசாரம் செய்து அவர்களை இடது கையாலே கொள்ளையடிப்பதும் இந்து பூர்வீக நாகரீகமானால், இந்த நாகரீகம் தேசமுழுதும் பயத்தையும், லோபத்தையும், ஐயத்தையும், தங்கள் மத தந்திரத்தைக் குறித்து வெட்கங்கெட்ட பொய்களையும், மனிதனுடைய சமாதானத்திலும் பொது சுகோதாரத் தன்மையிலும் தங்களுக்கு நல்லெண்ணமிருப்பதுபோலே பேசும் எண்ணை தடவின பொய்களையும் விதைப்பது போல விருக்கிறது என்பதையே "குடி அரசு" பத்திராதிபர் சொல்லுகிறார். ஆலோசனை யிருப்பவர்கள் எல்லோரும் தெரிந்துக் கொள்ளுங்கள். நம் பூர்வீக ஆஸ்தியில், பெரும் வயிறன் தன் அமித போஜனத்தை கைவிட மனமில்லாமல் அஜீரணத்தால் உண்டாகி மூச்சைப் பிடிக்கும் பயங்கர கனவுகளை மருந்தினால் தீர்த்துக் கொள்ளலாமென்ற வீணாசை கொள்ளுவதுபோல், நம் தேசத்தை அடிமை கொண்டதும், பாப்பானால் கைவிடப்பட்டதும், அழுகி நாற்றமெடுத்து அனுஷ்டானத்தால் தள்ளப்பட்டதுமான வருணாஸ்ரம தர்மத்தை, ராஜாங்க உத்தியோகச்சந்தையிலே பாப்பானுக்கே கொள்முதல் போய்ச் சேரவும், பங்கு பங்காளிகளான அய்யங்கார், அய்யர் இவர்கட்குச் சரிபாதியை நிச்சயிக்கவும், அய்யங்காரில் பெரிய உத்தியோகஸ்தர் ஒருவரும் ஆள் மதிப்பில் விற்க வந்திருக்கிறார்கள்.

வைதீகப் பண்டிதர்கள் வயிறு குறைந்துவிடுமென்பதாலும், சாஸ்திர எட்டை தப்பர்த்தம் செய்வதாலும், உலகம் பரந்திருப்பதை உணராததாலும், வருணாஸ்ரம கர்மத்தை வற்புறுத்துகிறார்கள். இவர்கள் அப்படியல்ல; நம் தேச சரித்திரம் தெரிந்தவர்கள். பூர்வீக ஆரியர்கள் கூட்டம் கூட்டமாக ஆடு மாடு மேய்த்து வீடு வாசவில்லாமல் தண்ணீர் கண்டவிடமெல்லாம் தங்கினதும், பின் ஆடு மாடுகளை அடித்துத்தின்றதும், பின் இயற்கைத் தோற்றங்களை தெய்வமாகக் கொண்டதும், அதற்கு பின் தொழில் முறைக்கு வருணசிரம தர்மம் ஏற்படுத்திக் கொண்டதும், அதனால் அநேக உள்மதப் பிரிவுகள் உண்டானதும், அதனால் ஆபத்து வந்ததும், அதனால் இந்தியா வீழ்ச்சியடைந்ததும், இப்பொழுது அதனால் வந்துகொண்டிருக்கும் நஷ்டங்களும் தெரிந்தவர்கள், மேல் நாட்டு சரித்திரங்களும் படித்தவர்கள். ஐரோப்பாவில் முன் ஒரு காலத்தில் எல்லா விவகாரங்களிலும் பாதிரிகளுடைய அதிகாரம் பூர்த்தண்யமா நடந்தது. எங்கும்வீசியிருந்த பாதிரிப் புரோகித வலையை அறுத்த பிறகுதான் ஐரோப்பிய ஜனங்கள் சுயராஜ்ய பாதையிலே கால்வைக்க இடமுண்டாயிற்று. இங்கிலாந்திற்கும் ஸ்பெயின் தேசத்தாருக்கும் உண்டான சண்டையில், கோவில் விவகாரங்களான வலிய தளைகளுக்கு உட்பட்டிருந்ததினால் ஸ்பெயின் கப்பற் படை, கடலலைகள் விடுதலை கொண்டு வீசும் காற்றுக்கு ஒத்து செல்லுவதுபோலச் சென்ற இங்கிலீஷ் கப்பற்படைக்குத் தோற்றுப் போயிற்று. ஒருகாலத்தில் ஸ்பெயின் தேசத்தார் மேலான பதவியை வகித்திருந்தார்கள். அது அசையாத மாமூலின் ஜாதிமரபுப்படி அதிகாரம் வகித்திருந்தது. அதனால் அது தன் செல்வாக்கை இழந்தது. இங்ஙனம் ஐரோப்பாவில், கோவில் கட்டுக்குக் குருட்டுத்தனமாக ஏற்பட்டிருந்த தளையை வெட்டி தன் மதிப்பைக் காக்க கற்ற ஜாதியாரே தலை தூக்குவது இயல்பாயிற்று. இவர்கள் இந்த சரித்திரமும் படித்தவர்கள். சீனர் ஒரே நாளில் பன்றிக் குடுமியை நறுக்கி எறிந்ததும், பழயவழக்கங்களாகிய சுவர்களை ஒரே இரவில் இடித்துத் தள்ளி ஜப்பான் வெற்றிக் கோலம் பூண்டு நின்றதும் அதைமறுநாள்காலையில்எழுந்தவுடன்உலகமுழுவதும் வியந்ததும், இவர்கள் அறிந்ததுதான். ருஷியாவில் உத்தியோகஸ்தர்கள் காடாரம்பமாகப் படர்ந்திருந்ததும், ஆங்கு ஜனங்கள் சிறிய சர்க்கார் அதிகாரிக்கும் மிகவும் அற்பமான பழய சாஸ்திர கட்டளைக்கும், பாதிரிகளுக்கும் முழந்தாள் படியிட்டு குடிகள் ஆண்மையிழந்து போனதும், அவ்வதிகாரிகளையும், பாதிரிகளையும், சாஸ்திரங்களையும் அங்கிருந்து ருஷியா அடித்துத் துரத்தி விட்டதும் இவர்கட்குத் தெரியும். துருக்கி தேசத்தார் பூர்வீக நாகரீகமுடையவர்கள். நம்முடைய மதப்பற்றுக்கு எந்த விதத்திலும் தாழ்ந்தவர்களல்ல. அவர்களுடைய வேதமும் கடவுளால் கொடுக்கப்பட்டவை. முசல்மான்களின் ஆசாரியரான முகமது நபி நாயகம்அவர்கள் கடவுளின் பிரதிநிதியின் யோக்யதைக்குத் தகுந்தவர். அப்படி எல்லாமிருந்தும் மதக்கட்டுப்பாடுகள் கமால் பாட்சாவால் அறுக்கப்பட்டு சீர்திருத்தம் நடைபெறுவதும் இவர்களுக்குத் தெரியும். இன்னும் அநேக ஜன சமூகங்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த மதக் கட்டுப்பாட்டை எடுத்தெறிந்த சரித்திரங்களெல்லாம் இவர்களுக்குத் தெரியும். என்பதில் யாருக்கும் சந்தேகமிருக்காதென நினைத்து இதை இம்மட்டோடுநிறுத்தி வேறு விஷயத்தைக் கவனிப்போம்.

எல்லா தேச சரித்திரங்களையும் படித்து பெரிய அதிகார பதவியும் வகிப்பவர்களான இவர்கள் மனச் சாக்ஷி எவ்வளவு மறைபட்டிருக்க வேண்டுமென்பதே இதில் முக்கியமான விஷயம். மறைப்பது வக்கீல் தொழிலின் உள் பழக்கத்திற்கு ஒத்தாலும் வெளியில் கண்டால் குற்றம். நீதிபதிகள் நிர்வாக பதிகள் முன்னே நியாயம், நீதி, சர்வ ஜன உரிமை, சர்வஜன அன்பு இவைகளைப் பற்றி ஆலோசனை வரும்போது இவர்கள் பிரசங்க மேடையிலிருந்த மனோசாக்ஷி மகத்தானபிரிடிஷ் நீதியின் ஆசனத்திலும் வந்துவிட்டதானால் இவர்கள் தீர்ப்பின் கொடுமை ஜன சமூகங்களை எவ்வளவு கொடுமைக்குள் சேர்க்குமென்பதற்குப் பயப்படாமலிருக்க முடியுமா? சாதாரணமாக ஜனங்கள் வெள்ளைக்கார நீதிபதியை விரும்புவதும், பெரும் பதவிகளில் வெள்ளைக்கார சிவிலியன் தான் இருக்க வேண்டுமென்று வெள்ளைக்காரர் சொல்லுவதும் நீதிகளில் வைதீகம் கலந்து விடாமலிருப்பதற்காகவே.

வேறு என்னாட்டிலும் ஆத்மஞானம் நம் நாட்டைப்போல அடுக்கடுக்காக இல்லை என்றும், அதை அடைந்தவனே பிராமணனென்றும், அவனே முதல் ஜாதி என்றும், நம்பூர்வீக நாகரீகத்திற்குச் சிறப்பாகக் கூறப்படுகிறதை வாஸ்தவமாக ஒத்துக்கொள்ளுவோம். வெறும் பேச்சு ஞானமாகுமா? அவை வாசா கைங்கரியமல்லவா? கிளிகளும் அவ்வாறு பேசும். இக்காலத்தில் யந்திரங்களும் ஆகாசங்களும் பேசுகின்றன. வைராக்யம், உபரதி ஆத்ம ஞானம், பொறை, சமதிருஷ்டி, அளவு கடந்த அன்பு ஆகிய இவற்றை பூரணமாய்ப் பெற்று வாழ்க்கையை நடத்தும் பிராமணனை இவர்கள் காட்டட்டும். அப்படியிருப்பது மெய்யென்றால் பூர்வீக நாகரீகமென்று விளங்கும் ஞானபொக்கிஷத்தை யெல்லாம் வெளியே கொணர்ந்து தனிகர் தரித்திரர் மேலோர் கீழோர் ஆகிய எல்லோருக்கும் அளிக்காமலிருத்தல் நியாயமாகுமா? தன்னயத்தை ஒழித்து, ஞானமும் அன்பும் பெற்று,அவற்றைப் பிறருக்கு அளிக்க உழைப்பவனே பிராமணன் என்றல்லவா பூர்வீக சுருதிகள் சொல்லுகின்றன. அத்தகைய பிராமணனிடத்தில் உலக வாசனை சிறிதேனுமின்றி பிர்மஞானமே விளங்கும். அத்தகைய ஒருவரை முதல் மனிதனாக வைக்க "குடி அரசு" ஆக்ஷேபிக்கவில்லை. அதில்லாமல் சுகபோக ஆடம்பரத்துடன் வாழ்க்கையை நடத்த எந்த தொழிலும் செய்து பணம் சம்பாதிப்பதே பெரிதாகக்கொண்டிருக்கும் பாப்பார்கள் கூடி, பிராமணனென்னும் பெரிய பெயரைக் காட்டி, வருணசிர தர்மம் எத்தனை அடுக்காக இருக்கிறது பாருங்கள் என்று பேசுவதற்கு பாப்பார்கள் வெட்கப்படவேண்டாமா? இது இவர்கள் பூர்வீக நாகரீகத்திலுள்ளதுமல்லவே? இக்காலத்து நாகரீகத்திற்கும் அவர்களுக்கும் ஒத்ததல்லவே? இப்பொழுது வேதத்தில் சொன்ன பிராமணனுமில்லை, க்ஷத்திரியனும் வைசியனும் இந்த காலத்திலில்லை என்று பாப்பார்களே சபை கூடிச் சொல்லியும் விட்டார்கள். வேசிமகன், ஒழுக்கமில்லாதவன், ஆசாரமில்லாதவன், கண்டதைப் புசிப்பவன், அடிமை விலைக்கு வாங்கப்பட்டவன், என்று ஸ்மிருதியில் சொல்லியிருக்கும் சூத்திரன் நான்தான் என்று எந்த அநாகரீகமான தேசத்திலும் ஒத்துக்கொள்ள ஒருவனுமில்லை. அப்படி இருக்க வருணசிரமம் பேசுவது எதற்காக? பேசுகிறவர்கள் பேசும் விஷயத்தில் ஏகதேசமாவது ஒத்திருக்க வேண்டும். பேசினவர்கள் பெரிய அதிகாரமுடையவர்களானபடியால் இவர்கள் மனம் பயப்படாது. வக்கீல் தொழிலின் பழக்கத்தால் இது வேறு அதுவேறு என்று விவரிக்கவும் திறமையுண்டு. தங்கள் வாழ்க்கைக்கும், பேசும் பேச்சுக்கும் உள்ள வித்தியாசம் தெரிந்து உள்ளம் வெட்கத்தால் சுட்டிருக்கவேண்டும். இருவரில் ஒருவரான சர். சி. பி. ராமசாமி அய்யரின் பூர்வீக இந்து நாகரீகம் உங்களுக்கெல்லாம் தெரியும். வி. வி. சீனிவாசய்யங்கார் இங்கிலீஷ் நாகரீகத்திலிருந்தாலும் கோவிலுக்குப் பணம் கொடுப்பதாகவும் போவதாகவும் வைஷ்ணவத்தில் பற்றுடையவராய் இருப்பதாகவும் தெரிகிறது. அவர் ஒவ்வொரு முகத்தில் ஒவ்வொருவித வசீகரத்தோற்ற மிருக்கிறது. என்கிறார் அதாவது தாழ்ந்தஜாதியாரின் முகத்தை விடபாப்பான் முகத்தில்வசீகரம்அதிகம்என்கிறார் வசீகரத்தோற்றம் வித்தியாசப்படலாம்.கீழ் மேல் இதிலென்ன விருக்கிறது? பாப்பானின் வசீகரம் மேலாயிருந்தால் ஏகசக்ராதிபத்தியத்தையல்லவோ வகிக்க வேண்டும். வெளியில், வய

இதன் தொடர்ச்சி 18 ம் பக்கம் பார்க்க

# திருவள்ளுவரும் இல்லறமும்

சாமி சிதம்பரனார் எழுதுவது

கட்டுரை 6

திருக்குறளில் முதல் நான் கதிகாரங்கள் பொதுவாகக் கூறப்படுகின்றன. அவை, கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல், என்பன. இவை நான்கையும் கடவுள் வாழ்த்தாகக் கொள்ளு வாருமுண்டு. இனி முறையே இல்லறத்தைப்பற்றியும், துறவறத்தைப்பற்றியும் அறத்துப்பாலில் கூறிச் செல்கின்றார். இவ்விரண்டு வகைகளிற் கூறப்படுவன முழுவதும் தமிழர் கொள்கை யெனக் கூற வியலாது. ஆரியர் கொள்கைகளும் கலந்து வருகின்றன. அறிஞர்களாயிருப்பவர்கள் ஆரியர் கொள்கைகளையும், தமிழர் கொள்கைகளையும் வேறு வேறு பிரித்தறிந்து கொள்ளுவார்களாக.

உலகில் அறம்பொருள் இன்பங்கள் அடைவதற்கு இல்வாழ்க்கையே சிறந்த வழியாகும். இல்வாழ்க்கையிலிருக்கின்றவர்களே ஒரு ஆசிரியரையடைந்து கல்வி பயின்று கொண்டு நல்லொழுக்க வழியில் நடக்கும் பிரமச்சாரிகளுக்கும், தன் மனையாளோடு வனம் புகுந்து தவமியற்றும் வானப்பிரத்தர்களுக்கும் முற்றத்துறந்த யோகிகளுக்கும் துணையாவான் என்று கூறுவர். இதனைத் திருவள்ளுவர் (1) இல்லறத்தில் வாழ்கின்றவன் என்று சொல்லப்படுபவன் அறவழியில் நடக்கும் இயல்பினையுடைய மூவர்க்கும் அவர் செல்லும் நல்ல வழிக்கு நிலைபெற்றதுணையாவான் என்று கூறுவதனால் அறியலாம்.

அன்றியும் இல்லற வாழ்க்கையிலிருக்கிறவன், தம் சுற்றத்தினரால் துறக்கப்பட்ட ஆதரவற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் ஆதரவின்றி இறந்தவர்களுக்கும் துணை செய்யக்கடமைப்பட்டிருக்கின்றான். இங்ஙனம் ஏழை மக்களைக்காப்பாற்றுவதால் அடையும் புண்ணியத்தினால் இல்வாழ்வான் எல்லோரையும் விட உயர்ந்தவனாகின்றான். (2) ஆதாரவுள்ளவர்களால் வெறுக்கப்பட்டவர்களுக்கும், ஏழைகளுக்கும, ஒருவருமின்றியிறந்தவர்களுக்கும், இல்வாழ்வானென்று சொல்லப்படுவான் துணையாவான் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். இவர்களில் ஆதரவற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் உண்டி உடை முதலியவுதவுதலாற்றுணை செய்யலாம். இறந்தார்க்குத் துணை செய்வது எங்ஙனம் என்றால் அவர்களின் உடல் வெளியிற் கிடந்து பலராலும் இகழப்படாதிருக்குமாறு எடுத்து அடக்கஞ் செய்தலேயாகும். இதற்குப் பரிமேலழகர் இறந்தார்க்கு நீர்க்கடன் முதலியன செய்து நல்லுலகின்கட் சேர்த்தலானும் என்று விளக்கிக் கூறுகின்றார், இப்போதும் இறந்த பின் செய்யும் நீர்க்கடன் முதலியவைகள் நெருப்பாற் சுடப்பட்டார்க்கேயன்றிப் புதைக்கப்பட்டவர்களுக்கில்லையென்பதை யறிகின்றோம். சுடப்படும் வழக்கம் தமிழர்களுக்கில்லை. தமிழர்கள் இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கத்தையே மேற் கொண்டிருந்தனர். சுடப்படும் வழக்கம் ஆரியர்களுடையதாகும். ஆரியர்களிடத்திலிருந்தே தமிழர்களும் சுடப்படும் வழக்கத்தைக் கற்றுக்கொண்டனர். ஆகையால் இறை நீர்க்கடன் செலுத்துதல் தமிழர் வழக்கமன்றென்பதை யுணரலாம்.

இல்வாழ்வான் ஐம்புலன்களின் தன்மைகளையறிந்து அவற்றை ஒரு நிலையில் அடக்கியாளும் உண்மைத் துறவிகளுக்கும், வீரர்களாகவும் சான்றோர்களாகவும் இருந்து இறந்தவர்களுக்கு நாட்டப்படும் சிலைகளாகிய தெய்வங்களுக்கும, புதிதாக வந்த விருந்தினர்களுக்கும், சுற்றத்தார்களுக்கும் துணை செய்யக்கடமைப் பட்டிருக்கின்றான். இதனை(4) புலன்களின் கூறுபாட்டையறிந்தவர்கள், தெய்வங்கள், புதிதாக வந்தவர்கள், சுற்றத்தார்கள் என்ற இவர்களை தானும் ஐம்புலன்களின் வழியில் தவறாமல் நின்று காப்பாற்றுதல் தலைமையான கடமையாகும் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். பரிமேலழகர் தென்புலத்தார் என்பதற்குப் பிதிரர் எனப்பொருள் கூறி "பிதிரராவர் படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி, அவர்க்கிடம் தென்றிசையாதலின் தென்புலத்தார் என்றார்" என்று பொருள் கூறுகின்றார். கடவுட் சாதிக்கு மக்கள் எவ்வாறு உதவி செய்வதென்று கேட்கின்றோம். தெய்வமென்பது இன்னதென விளக்காமல் சாதியொருமை யென்று கூறிப் பல தெய்வங்கள் என்பதை மட்டும் பரிமேலழகர் விளக்கினார். தெய்வங்களைத் தமிழர்கள் பலவகைவிழாக்கள் செய்து வணங்கி வந்தார்கள என்பதை மலையின் பெருமையைக் கூறுமிடத்திலுங் கூறினேம் அதெதெய்வங்கள் சான்றோராகவும், வீரர்களாகவுமிருந்து இறந்தவர்களாவார்கள். அவர்களுக்குச் சிலை நட்டு வீரராகக்கொண்டு வழி படுவது தமிழர் வழக்க மாதலின் அதனையே சுண்டுத் திருவள்ளுவர் கூறினார் என்று கருதஇடமுண்டு.

சில குடிகள் அழியாமல் பரம்பரையாக வாழ்வதைப் பார்க்கின்றோம். சில குடும்பங்கள் வழித்தோன்றலின்றி இடையில் அழிந்து போவதைக்காண்கின்றோம். அதற்குக் காரணம் குடும்பத்திலுள்ளவர்களேயாவார்கள். நல்லவழியிற் பொருளீட்டி, அப்பொருளை மேற் கூறியவர்களுக்கும் உதவி, வாழ்கின்றவர்களின் குடும்பங்கள் எந்நாளும் அழியாது வளர்ந்து கொண்டே வரும் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். இதனை (4) பாவத்திற்குப் பயந்து பொருளீட்டி பிறருக்கும் உதவித்தானும் உண்ணுமாயின் அக்குடியில் சந்ததி குறைதல் எக்காலத்தும் இல்லை என்று கூறியதனாலறியலாம்.

அன்பு என்னும் குணம் இல்லாதவனால் யாருக்கும் ஒருதவியும் செய்ய முடியாது. அன்புடையவனே உதவி செய்யக்கூடியவனாவான். இல்வாழ்க்கைக்கு இவ்வன்பு மிகவும் இன்றியமையாததாகும். மனையாளோடு சேர்ந்து வாழ்வதே இல்வாழ்க்கை. அன்பற்றவன் எவ்வாறு மனையாளோடு சேர்ந்து வாழ முடியும்? இருவரும் ஒத்த அன்புடையவராயிருந்தால்தான் இல் வாழ்க்கையைத் தவறுதலின்றி நடத்த முடியும். தனக்கு உரியவர்களிடம் மட்டிலிருக்கும் அன்பு வரவர வளர்ந்து யாவரிடமும் செல்லுவது இயற்கை. அன்பு வளர வளர அறஞ்செய்யும் பண்பும் வளரும். ஆகவே அன்பும் அறஞ்செய்யுந் தன்மையும் இல் வாழ்வார்க்கு மிகவும் வேண்டுவதாகும். அன்பே இல்வாழ்வார்க்குரிய குணமாகும். அறமே இல்வாழ்க்கையின் பயனாகும். இதனை (5) "ஒருவன் இல்வாழ்க்கை அன்பையும், பிறர்க்கு உதவி செய்தலாகிய அறத்தையும் உடையதாயின் அவையே இல்வாழ்க்கையின் குணமும், பயனும் ஆகும்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

இல்லறம் துறவறமென்ற இரண்டிலும் இல்லறமே சிறந்ததாகும். மற்றைய வாழ்க்கையிலுள்ள அத்துணைப் பெருந்துன்பங்கள் இல்லற வாழ்க்கையிலில்லை. எளிதாகச் செய்யக்கூடிய அறங்களே இல்லற வாழ்க்கைக்குரியதாக விருக்கின்றன. அவற்றை முறை வழுவாமற் செய்வாராயின் அவர்கள் வேறு வழியிற் சென்று பெறக்கூடிய பலன் யாதொன்றுமில்லை. இதனை (6) "ஒருவன் இல்வாழ்க்கையை அறவழியிற் செலுத்துவானாயின், அவன் அதற்குப் புறமாகிய வழியிற் போய் பெறக்கூடிய பயன் யாதுளது?" என்று திருவள்ளுவர் கூறுகின்றார். அறவழியிற் செலுத்துவது பழிக்குப் பயந்து பொருளீட்டி பிறர்க்கு உதவி செய்து வாழ்வதாகும்.

நன்மையடைய முயல்கின்றவர்களுக்குள் தலைமையானவன் யார் எனில் இல்வாழ்வானேயாவான். பிறருக்கு உதவி செய்வதைவிடச் சிறந்த நன்மை உலகில் வேறொன்றும் இருப்பதாகக் கூற முடியாது. அந்நன்மையைச் செய்கின்றவன் இல்வாழ்வானே யாவான். இதனை (7) "முறைப்படி இல் வாழ்க்கையில் வாழ்கின்றவனே நன்மைபெற முயல்கின்றவர்களுக்குள் முதன்மை யானவன்" என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

இவ்வுலகில் தவ நெறியில் நிற்பவர்களை மிக உயர்ந்தவர்களென்று யாவரும் கொண்டாடுகின்றனர். ஆனால் இல்வாழ்க்கையில் இருக்கின்றவர்கள் தமக்குரிய கடமைகளைச் செய்துகொண்டிருப்பார்களாயின் அவர்களைத் தவமுடையவர்களைவிட உயர்ந்தவர்களென்று கூறலாம். ஏனெனில் தவஞ் செய்வோர்க்குத் துணைசெய்து காப்பாற்றுவதனால் இல் வாழ்வானே தவத்தையும் செய்தவனாகின்றான். இதனை "தவமும் இல்வாழ்வான் இல் வழியில்" என்ற நான்மணிக் கடிகை வாக்கானும் அறியலாம். ஆகவே இல் வாழ்வார் தவஞ் செய்வோர்க்கு யாதொரு துன்பமும் உண்டாகாமற் காக்கவும் கடமைப் பட்டிருக்கின்றனர். (8) "பிறரையும் நல்வழியில் நடக்கச் செய்து, தானும் அறத்தினின்றும் தவறாமல் நடக்கும் இல்வாழ்க்கை தவஞ்செய்வதைவிட வலிமையுடையதாகும்" என்று திருவள்ளுவர் கூறியதைக் கொண்டு இல்வாழ்க்கையின் பெருமையை யுணரலாம்.

இல்வாழ்க்கையிலிருக்கின்றவன் தான் அறஞ் செய்யா விட்டாலும், அவனை யறியாமலே சில அறங்கள் நடக்கின்றன. முதலில் தன் பெற்றோர்களைக் காப்பாற்றுங்கடமையாகிய அறத்தைச் செய்கின்றான், பின்னர், தன் துணையாகிய மனைவியைக் காப்பாற்றுகின்றான், பின் தன் மக்களைக் காப்பாற்றுகிறான். தனது நெருங்கிய உறவினருக்குஞ் சில சமயங்களில் உதவி செய்கின்றான். இவ்வகையில் இல்லறத்திலிருக்கின்ற ஒரு மனிதன் இரண்டு மூன்று மனிதர்களையாவது காப்பாற்றக் கூடிய நிலையிலிருக்கின்றான். துறவறம் என்ற பெயருடைய சந்நியாசத்தை மேற் கொள்ளுகின்றவனால் யாருக்கு என்ன பயனுண்டு? அவனாற் பிறருக்குத் துன்பமேயன்றிப் பயன் சிறிதுமில்லை. அல்லாமலும் இல்வாழ்கின்றவன் பிறன் பழிக்காத வழியில் இல்வாழ்க்கையை முறைப்படி நடத்தினால் அதன் மேன்மை அளவிடக்கூடிய தொன்றன்று. அறம் என்று சொல்லப்படுவது இல்வாழ்கையே யாகும். ஏனெனில் அறஞ் செய்வது இல்வாழ்க்கையில் தானிருக்கின்றது. (9) "நூல்களில் அறமென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்வாழ்க்கையே யாகும். அதுவும், பிறனாற் பழிக்கப்

இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

# ஆலய ஒழுக்கம்.

ஸ்ரீ C M ராமச்சந்திரம் செட்டியார் B. A. B, L. அவர்கள் எழுதுவது

ஒவ்வொரு மதத்திலும் கடவுளை வழி படுவதற்காக ஆலயங்களை ஏற்படுத்தி இருக்கின்றனர். அவ்வாலயங்களையும் அவ்வச்சமயத்தார் தங்கள் தங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி அமைத்திருக்கின்றனர். அவ்வாலயங்களின் அமைப்பும் கடவுளின் வழிபாட்டினது சிறப்பு நோக்கியேயிருக்கும். கடவுள் வழிபாடு அச்சமயத்தாரின் ஆன்ம ஈடேற்றத்திற்குக் காரணமாகஇருப்பது இதையுத்தேசித்துத்தான் ஆலய ஏற்பாடுகளும் இருக்கின்றன.

ஆன்ம ஒழுக்கத்துக்கும் (சமய ஒழுக்கம்) லௌகிக ஒழுக்கத்துக்கும் வித்தியாசம் உண்டு. ஆன்ம ஒழுக்கத்தில் "நம்மான்மா மேம்படவேண்டும். நாம் உலகத்தில் பிறந்ததனுடைய காரணத்தையறிந்து அதன் முழு பயனையும் பெறவேண்டும் இப்பிறப்பிற்குப் பிறகு நாம் என்றும் அழிவில்லாத நற்கதிபெற வழிகளைத்தேடவேண்டும்." என்பவைகளே பிரதானமானவை. ஆனால் லௌகிக ஒழுக்கத்தில் இந்த வாழ்வில் சுகம் அடையவேண்டி பொருள் சம்பாதிப்பது இரைதேடுவது அதற்குத் தகுந்த அரசாங்க முறைகள் வியாபார முறைகள் இவைகளையனுசரிப்பது ஆகிய இவைகள் முக்கியமான காரியங்கள்.

ஆன்ம ஒழுக்கத்துக்குப் பயனைத்தந்து அறிகுறியாக நிற்பது ஆலயம். ஆனால் லௌகிக ஒழுக்கத்துக்கு ஆதாரமாக நிற்பவை, வீடு வாசல் உத்தியோக சாலைகள் வியாபாரக் கூடங்கள். இவைகளில் ஒன்றிற்குள்ள தன்மைகளை மற்றொன்றிற்கேற்றினால் அவைகளின் நோக்கங்களை கெட்டு விடும். இதை அநுசரித்தே பெரியோர்கள் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு விதிகளை ஏற்படுத்தி இருக்கின்றனர். அவைகளை ஆகமங்களில் காணலாம்.

ஆனால் தற்காலத்தில் இக்கொள்கைகளை மாற்றி ஒன்றற்கொன்று விரவி நடத்தி வருகிறபடியால் நோக்கங்கள் மாறி அவ்வவைகள் தங்கள் தங்கள் பயனை முழுவதும் கொடுக்கிறதில்லை.

நமது தென்னாடுகளில் இவ்விதக் கொள்கைகளை அனுபவத்தில் விரவி நிற்றலை நாம் அதிகமாகக் காண்கிறோம். அவ்வித நிலைமையைக் காண நாம் துயருற வேண்டும். எனெனில் நாட்டு ஒழுக்கீனத்துக்கு அதுவே காரணம். 'சமய வழிபாட்டிற்கு ஏற்பட்ட ஆலயங்களில் லௌகிக ஒழுக்கத்துக்குகந்த வியாபார காரியங்கள் நடப்பதைப் பார்க்க எச்சமய வாதிதான் பொறுக்க முடியும்' நமது நாட்டில் எப்பெரிய கோயிலைக் கண்டாலும்முன்னிற்பது சில்லரைக் கடைதான். ஆலயத்துக்கு அவசியமாக வேண்டியது தேங்காய் பழம், இவைகளையன்றி ஒழுக்கத்துக்குமாறுன பீடி சிகரெட்டு முதலிய லாகிரி வஸ்துக்கள் அல்ல. ஆனால் இப்பொழுது இவ்வஸ்துக்கள் இல்லாத கடைகளை ஆலயத்துக்கு முன்னிலையில் காண முடியாது. அவ்விசக்கடைகளும் ஒழுங்காக வைக்கப்படாமல் நின்றும்ழுந்த எச்சிற்பதார்த்தங்களும் குப்பை கூழங்களும் சுற்றிலும் கிடக்க பரிசுத்த மெய்ப்பொருளைக் காணச்செல்வோர்க்கு முன் அசுத்தமும் விகாரத்தோற்றமுமே எதிர்நிற்கச்செய்கின்றன. பூஜைக்குரிய பதார்த்தங்களோ சிறிதேனும் சுத்தயில்லாமல் மற்ற ஒவ்வாத பதார்த்தங்களுடன் கலந்து நிற்கும். அவைகளை விலைக்கு வாங்குவதற்குள்ளாகக்கடைக்காரிகளுடன் பலவித வார்த்தைகள் பேசியே பொருள் பெறவேண்டியிருக்கும்.

இவ்விதம் சமய ஒழுக்கங்களில் மாறுபாடான காரியங்கள் இருந்த போதிலும் பதார்த்தங்களை யாவது சுத்தம் செய்யலாமென்றாலோ கோயிலினருகே சுத்த தீர்த்தம் கிடைப்பது அரிது. கோயில் பரிபாலனத்தார்கள் சுத்தமுடையதாகத் தீர்த்தவாவிகளை எக்காலத்தும் வைத்திருப்பதில்லை, தீர்த்தங்களை எக்காலத்தும சுத்தமாக வைத்திருப்பதை மறந்து விட்டார்கள். இவ்வித அபரிசுத்த பண்டங்களை நிவேதனத்துக்குக் கொண்டு சென்றாலும் நாமே அன்புடன் ஈசனுக்கு அளிக்க நமக்குச் சுதந்திரம் இல்லை. நடுவில் கோயில் அதிகாரவர்க்கத்தார்க்கு ஒரு கட்டணமும், பூஜை செய்யும் அர்ச்சகர்க்கு மற்றோர் கட்டணமும் செலுத்தாத வரையில் தேவதைக்கு எதுவும் அர்ப்பணம் ஆகிறதில்லை,

இவ்வித விவகாரத் தொல்லைகள் ஆலயங்களில் ஏன் ஏற்பட்டன? இவைகளைச் சீர்திருத்த முடியாதா?

ஆலயங்களுக்கு வெளிப்புறங்களிலேயன்றி பெரும் ஆலயங்களில் ஆலயங்களின் உட்புறங்களிலும் கடைகள் வைக்க ஆரம்பித்து விட்டார்கள். கோயில் பூஜை பதார்த்தங்களே அன்றிப் பலவித வேடிக்கைச் சாமான்களும் விற்க ஆரம்பித்து விட்டார்கள். இதனால் பெண்களும் பிள்ளைகளும் கோயிலுக்குச் செல்லுகையில் கடைப்பதார்த்தங்களின் மீது நாட்டத்தை செலுத்தி ஆலய வழி பாட்டை மறக்க ஏதுவாகின்றது. வியாபாரிகளும் லௌகிகத்தில் ஈடுபட்டவர்களும் வேலையில்லாவிடர்களும் சோம்பேறிகளும் கூடிப் பேச்சுப் பெருக்கும் இடம் ஆகி விட்டன கோயிலின் இடங்களெல்லாம். இதற்கு காரணம் என்னவெனில் கோயில்பரிபாலன சபையார் விழாக்களை விமர்சையாக நடத்த பொருள் சம்பாதிக்கும் எண்ணம் கொண்டவர்களாய் கடைகளுக்கு இடம் கொடுத்து வாடகை பெறும் ஏற்பாடுதான். ஆனால், அக்காரியத்தினால் கோயில் கெடுவதும் கோயிலுக்குச் செல்லும் பலரின் நோக்கமுங் காரியமுங் கெடுவதும் சமய கோட்பாடு கெடுவதும் அறியாத கண் மூடிகளாகி விடுகின்றனர். இக்காலத்துக்கோயில்களின் அறம் காப்பாளர்கள் என்னும் தர்மகர்த்தர்கள் கெட்டு அதர்மகர்த்தர்களே யாகிவிடுகின்றனர். எந்தக் கோயிலைப் பார்த்தாலும் பொருள் சம்பாதிக்கும் விடுதிகளே ஆய்விட்டன. மதுரையிலும் இராமேஸ்வரத்திலும் கடைகளை ஏன் கோயில்களில் வைக்க வேண்டுமோ? மதுரையில் முன்னிருந்த ஒரு பெருந்தகையான துரை மகன் கோவில் சுற்றிலுமுள்ள கடைகளை இடித்து நந்தவனமாக்கினான். அன்னவனது குணம் எங்கே? இப்போதுள்ள பரிபாலனத்தார் கோயிலின் உள்புறத்து மண்டபங்களில் கடைகள் வைக்க மின்சாரக் கம்பிகளும் வைத்துவியாபாரக் கூடம் ஆக்கிவிட்டனர். இவர்கள் குணம் எங்கே? இவ்விதம் பெரிய கோயில்களைப் பார்த்துச்சிறு கோயில்களுள்ளும் முன் புறத்தில் மதில்களையிடித்து கடைகள் கட்டத் தொடங்கி விட்டனர்.

அவ்விதம் பணவருவாய்களைப் பெருக்க வெடி மருந்து, ஊர்வலங்கள், பாணவேடிக்கைகள், வேசிகளின் கூத்துக்கள் இவைகளுக்குத் தாராளமாகச் செலவழித்தால், தாங்கள் எடுத்துக்கொண்ட தரும காரியம் நிறைவேறுவதாக எண்ணம் கொண்டிருக்கின்றனர் இக்காலத்துப் பரிபாலனத்தார். ஆனால் நமது முன்னோர்கள் அவ்வித எண்ணம் கொள்ளவில்லை. ஆலய நிர்மாணத்தைக் குறிக்கும், ஆகமங்களில் கடைகள் வைப்பதற்கு ஒரு திட்டம் ஏற்படுத்தவில்லை.

உடற் கூறு பாட்டையும் பிரபஞ்சக் கூறுபாட்டையும் உத்தேசித்துப் பல தத்துவங்களையும் உள்ளிட்டு, நிர்மாணங்கள் ஏற்படுத்தி இருக்கின்றனர். அவைகளின் அறிவு இக்காலத்தினருக்கு இருந்தால் ஏன் இவ்வித துர்க்காரியங்கள் ஏற்படுகின்றன?

மகமதிய சமயத்தார்களுடைய பள்ளிவாசல்களையும், கிறிஸ்தவர்களுடைய கோயில்களையும் பாருங்கள். எவ்வளவு சுத்தமாகவும் அமைதியாகவும் இருக்கின்றன. அவைகளின் உட்புகவே, மனவமைதி எல்லாருக்கும் ஏற்பட்டு விடும். எனெனில் சப்தம். அசத்தம் கிளப்பக்கூடிய வியாபாரக்கடைகள், அங்கேயில்லை. ஜெருசலம் என்ற புண்ணிய நகரத்துப் பெருங் கோயிலில் இயேசு கிறிஸ்து சென்றபோது, அங்கே கடைகள் இருந்தனவென்றும் அவைகளைக் கண்டவுடன் துரத்தி அப்புறப்படுத்தி விட்டார் என்றும் நாம் விவிலிய நூலில் படிக்கிறோம். அன்று முதல் எக்கிறிஸ்தவச் சமயக் கூடத்திலும் வியாபாரம் நடை பெறுவதில்லை. மகம்மதியர் பள்ளிகளிலும் இம்முறை கடுமையாக அநுஷ்டிக்கப்படுகிறது. ஆனால் நம் இந்து கோயில்களிலோ சேட்பாரின்றி இவ்வித குற்றங்கள்நடைபெறுகின்றன.

இறைவனிடம் அன்பு செலுத்துவதற்கும் இகலோக சுகத்துக்கு ஏற்பட்ட வியாபாரத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது. இச்செய்கைகளை அறவே விட்டொழித்தாலொழிய நமது சமய நிலையங்கள் முழுப்பலனையும் அளிக்கமாட்டா, என்று கூறலாம்.

ஆலயங்களில் கடைகள் வைப்பது மாத்திரமோ, தர்மகர்த்தாவிடம் சீட்டுப் பெறுவதும், அர்ச்சகர் பூஜைக்கும், விபூதி கொடுத்தற்கும், அஷ்டோத்திரத்துக்கும், சகஸ்ர நாமத்துக்கும், அபிஷேகத்திற்கும் தக்ஷிணை பெறுவதும், ஊர்வல, காலங்களில் வேடிக்கைகள் செய்வதிலும் பிரசாதம் வழங்குவதிலும், இதர ஒவ்வொரு காரியத்திலும் வியாபார விவகாரங்கள் நிறைந்திருக்கின்றனவேயன்றி, பக்தி தூய்மை, பிரார்த்தனை, இவைகளைக் கண்ணாலும் காண முடியாது மனத்தாலும் நினைக்க முடியாது.

இவைகளில் சீர்திருத்தங்கள் எக்காலத்து வருமோ?

## கோவை
## C. S. ரத்தினசபாபதி முதலியாரின் உருவப்படத் திறப்பு விழா.

நிகழும் டிசம்பர் மாதம் 22-ந்தேதி மாலை 5-மணிக்கு விக்டோரியா நகர மண்டபத்தில், மதராஸ் கவர்ன்மெண்டு வரவு செலவு லாக்கா அங்கத்தினரான கனம் N. மாக்மைக்கேல் M. A., I. C S., C I. E. அவர்களால், மதராஸ் சட்ட சபை அங்கத்தினரும், கோயமுத்தூர் நகர சபைத் தலைவருமான ஸ்ரீமான் ராவ் பகதூர் ரத்தின சபாபதி முதலியாரவர்களின் உருவப்படத் திறப்பு விழா சிறப்பாக நிகழ்த்தப்பெற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## தஞ்சை பள்ளியக்கிரகாரம் சுயமரியாதைச் சங்கம்.

18ல் ஒரு பொதுக்கூட்டம் திருவாளர் வீராசாமி ராஜுகாரு அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. திருவாளர் வீராசாமி ராஜுகாரு "பார்ப்பனர்களின் சூழ்ச்சி" என்பதை, மூடவழக்கங்களிலுள்ளவர் எல்லாரும் டை பழக்கங்களை விட்டோம் விட்டோம் என்று சொல்லும்படி உபந்யசித்தார்கள். பின்னர் புதிதாக பலர் அங்கத்தினர்களாகச் சேர்க்கப் பட்டார்கள். முடிவுரையில் 'குடி அரசு' 'திராவிடன்' 'ஜஸ்டிஸ்' பத்திரிகைகளை ஆதரிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்கூறி காரியதரிசி வந்தனம் கூறிய பின் கூட்டம் இனிது முடிந்தது.

த. ச. கணபதியா பிள்ளை. அமைச்சர்.

# பாரிசாதப் பரிமணம்
## "சுயமரியாதை"

**மதுரை திரு. வீ. மு. பொன்னையா எழுதியது.**

ஒரு நாடோ, அன்றி ஒரு சமூகமோ, அல்லது ஒரு மொழியோ முன்னேற்ற முறவேண்டுமேல், அந்நாட்டு மக்கள் முதலில் 'சுயமரியாதை' பெறுதல் வேண்டும். சுயமரியாதை பெறாது புரியும் எத்தகைய முயற்சியும் பயன்றராது ஒழியும். எனவே, இது போழ்து நமக்கு வேண்டுவது எது எனின், யான் 'சுயமரியாதை'யே என்று தயங்காது இயம்புவன்.

'சுயமரியாதை' என்றால் என்ன? எனக்கூர்ந்து நோக்குழீஇ, அஃது மக்களின் அற ஆக்கத்திற்கும், மறநீக்கத்திற்கும் துணைபுரியும் ஒன்று என்பது இனிது புலப்படக்காணலாம். 'மானம்' 'சமதர்மம்' 'சுதந்தரம்' 'ஆன்மஞான விளக்கம்' என யான் விரிந்த பொருள் கொள்கிறேன். மானங்காவாத மகனோ, அன்றி மகளோ மக்களினத்தைச் சேர்வரோ? சமதர்மத்தை அநுட்டியாத ஆணோ அல்லது பெண்ணோ அன்புடையாராவரோ? சுதந்தரத்தைப் பெறாத குமரனோ மற்று குமரியோ வீரராவரோ? ஆன்மஞான விளக்க முறாத மனிதனோ அல்லது மனுஷியோ இன்பவாழ்வைப் பெற இயலுமோ? இயலாது. ஆகவே, இஞ்ஞான்று நம்மவர்க்கு முதலில் வேண்டற்பாலது சுயமரியாதை என்று மறு முறையும் வலியுறுத்தி மேற் செல்கிறேன்.

மக்கள் இன்பவாழ்வின் ஆக்கத்திற்கும், துன்பவாழ்வின் நீக்கத்திற்கும் அரண் செய்வது ஒன்று உண்டு எனின், அஃது சுயமரியாதையே என்று கூறுவது தவறாகாது. சுயமரியாதை பண்டைஞான்று இருந்ததா? என ஆராயின் இருந்தது என்பதை நன்கு உணரலாம். பண்டு தொட்டு இன்று காறும் அஃது இருந்தே வருகிறது என்பதில் சிறியேனுக்குச் சிறிதும் ஐயமின்று. உலகில் மறத்திற்கே ஒடுக்கம் உண்டேயல்லால், அறத்திற்கு என்றும் முடிவு கிடையாது என்பது அறிஞர் அறிந்த தொன்று. சுயமரியாதை என்றும் இருந்தே தீரும். ஏன்? அஃது அறத்தின் கூறுகளிலொன்றாகலான் என்க.

சென்ற சிலகாலமாய் சுயமரியாதை சில சுயநலக்குழுவினரின் சூழ்ச்சியாலும், பாமர மக்களின் அறியாமையாலும் மறைக்கப்பட்டிருந்ததேயன்றி இறந்து போகவில்லை. இன்றைப் போழ்து, நமது வைக்கம் வீரர் திரு. ஈ. வெ. ராமசாமி அவர்களின் கருணையால் மறுபடியும் வெளித்தோன்ற ஆரம்பித்துள்ளது. எளியேனது மனமுவந்த வணக்கம் வீரருக்கு உரியதாக.

சுயமரியாதையின்றி வாழ்வு நடாத்தும் ஆண்மகனாயினும் ஆக, பெண்மகளாயினும் ஆக, அவனை—அவளை யான் மக்களினத்தைச் சார்ந்தவர் என்று கூற ஒருப்படேன். மாக்கள் (விலங்குகள்) என்றும், நடைப்பிணங்கள் என்றுமே இயம்பத் தயங்கவோ, அஞ்சவோ செய்யேன். சுயமரியாதை எது? என்பது பற்றிக் கீழே சில தருகிறேன். அன்பர்கள் ஊன்றி நோக்கி உண்மைகண்டு சுயமரியாதையைப் பெற இயற்கை அன்னை துணை புரிவாளாக.

மக்கள் அனைவரும் சமம் என்பதை அறிவுறுத்துவது சுயமரியாதை. ஒருவர் உயர்ந்தவர். வேறொருவர் தாழ்ந்தவர் என்ற பேத உணர்வை அகற்றி அனைவரும் சமம் எனப் போதிப்பது சுயமரியாதை. ஒருவர் தீண்டற்குரியார் மற்றொருவர் தீண்டற்கரியார் என்ற அடிமை எண்ணத்தை ஒழித்து, சகலரும் தீண்டற்குரியாரே எனச்சாற்றுவது சுயமரியாதை. உண்மை உணர்வூட்டுவது சுயமரியாதை. வர்ணாசிரமத்தை அகற்றுவது சுயமரியாதை. ஒருவர் கோவிலுக்குட் புக உரிமையுடையார், மற்றொருவர் அவ்வாறு செல்ல உரிமையில்லாதார் என்ற அறியாமையை அகற்றி, அனைவரும் இறைவன் மக்களேயானதால், கோவிலுட் போந்து இறைவனை வழிபட உரிமை யுடையாரே என்பதை அறிவுறுத்துவது சுயமரியாதை.

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்ற அருள்நோக்கைத் தருவது சுயமரியாதை. சூழ்ச்சிகளினின்று விடுபடுமாறு செய்ய வல்லது சுயமரியாதை. ஒரு குலத்திற்கு ஒருவித நீதியும், வேறொரு குலத்திற்கு வேறொருவித நீதியும் செய்வது கொடுமை; அறியாமை, சூழ்ச்சி என்றும், மக்கள் அனைவரும் இறைவன் படைப்பில் சமமேயாகலான், அனைவருக்கும் ஒரே நீதி செய்வதே அறிவுடைமை என்றும் போதிப்பது சுயமரியாதை. ஒரு குல உயர்வுக்கும், மற்றொருகுலத் தாழ்வுக்கும் என சில சுயநல மாக்களால் யாக்கப்பெற்ற புராணங்கள், மறைகள் ஆகியவற்றை நம்பி இடர்ப்பட வேண்டாம் என அறிவுறுத்துவது சுயமரியாதை. அறியாமையினின்று, மூட பழக்க வழக்கங்களினின்று, கொடுமைகளினின்று விடுதலை பெறுதலே முதல் சுயராஜ்யம் என விள்ளுவது சுயமரியாதை. ஆணும் பெண்ணும் சமம் என்பதை உணர்த்துவது சுயமரியாதை. பிராமணன் என கூறப்படுபவன் உயர்ந்தவன் எனவும் மற்ற பெயர்களைக் கொண்டுள்ளவர் தாழ்ந்தவர் எனவும் உள்ள கொடிய அநாகரீகமான, அறியாமையான எண்ணத்தை அகற்றி, 'எல்லாரும் ஒரே ஜாதி' என உண்மை உணர்வு தருவது சுயமரியாதை. பகல் முழுவதும் பல கொடுமைகளைச் செய்துவிட்டு இரவில் 'ராமா! கோவிந்தா!! என்னைக் காப்பாற்று' எனப் போலி வழிபாடு செய்வதால் இறைவன் காப்பாற்றி விடார் என்பதையும், அனைத்துயிரையும் தன்னுயிர் போலெண்ணி நடப்பதே உண்மை இறைவன் வழிபாடாகும் என்றும் மெய்யுணர்வூட்டுவது சுயமரியாதை. மனதிலொன்று வாக்கிலொன்று இன்றி வாழ்வு நடத்தாது, மனதிலுள்ளவாறே செயலிலும் நடக்கும் வண்ணம் செய்வது சுயமரியாதை. எல்லாருக்கும் கொடுப்பது ஈகையன்று என்பதையும், வறியார்க்கு கொடுப்பதே ஈகையாகுமென்பதையும் மொழிவது சுயமரியாதை. உண்மையை எவருக்கும் அஞ்சாது தயங்காது எடுத்தியம்பும்படி அறைவது சுயமரியாதை. 'புரோகிதம்' என்பது ஒரு சில சுயநலத்தார் வயிற்றுப் பிழைப்புக்கென உண்டாக்கப்பட்டது என்னும் புரோகிதம் செய்வதால் பல நன்மைகள் உண்டாகின்றன எனக் கூறப்படுவது முற்றும் 'அபாண்டமான பச்சைப் பொய்' என்றும் உண்மை கொளுத்துவது சுயமரியாதை. சமதர்ம நூல்களுக்குச் சகோதரனாயிருப்பதும், அதர்ம நூல்களுக்கு எதிரியாய் நிற்பதும் சுயமரியாதை. உள்ளதை நம்பும்படியும் இல்லதை நம்பாதிருக்கும்படியும் அறிவு தருவது சுயமரியாதை. ஆன்மஞான விளக்கத்தை ஈவது சுயமரியாதை. 'மந்திரத்தால் மாங்காய் விழாது' என்ற அனுபவ மொழியை உதவியது சுயமரியாதை. கிணற்றில் நீர் எடுக்க ஒரு சாராருக்கே உரிமையுண்டு, மற்றவர் எடுக்கக் கூடாது என்ற கொடுமையை எதிர்த்து நின்று; அனைவருக்கும் உரிமையுண்டு எனக்கூறுவது சுயமரியாதை. ஒருவர் படிப்பதை மற்றவர் படிக்கக் கூடாது, படித்தால் நாவை அறுக்க வேண்டும், கேட்கக்கூடாது, கேட்டால் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றல் வேண்டும் என்ற வெறுக்கத்தக்க கொடுமையான சட்டங்களுக்கு எதிரியாய் நின்று மக்கள் அனைவரும் படிப்பதற்கும், கேட்பதற்கும், பேசுவதற்கும் சம உரிமை உடையாரே எனச்சாற்றுவது சுயமரியாதை. உலகிலுள்ள சகல தொழில்களும் அனைவருக்கும் பொதுவாகலால், ஒரு குலத்தாருக்கு மட்டும் உரிமையாகிடாதுஎன்பதை உணர்த்துவது சுயமரியாதை. அறிவிற் சிறந்தார் எவராயினும் அன்பிற் சிறந்தார் எவராயினும் அவர் 'அந்தணரே, பிறப்பினால் எவருமே அந்தணராகார் எனச் செப்புவது சுயமரியாதை. பிறவியின் காரணத்தால் சிற்றுண்டி விடுதி (காபி ஓட்டல்)யில் எச்சில் தட்டு அலம்புவோனையும், பஞ்சாங்கம் ஓதுபவனையும், வக்கீல் வேலை செய்வோனையும் பார்ப்பான் என்ற காரணத்தால் 'சாமி' என்று அழைப்பது அறியாமை என்று சாற்றுவது சுயமரியாதை. பிராமணரல்லாதார் என கருதப்படும் குலத்தில் பிறந்த ஒருவர் எத்தகைய பேரறிஞராயிருப்பினும், ஒழுக்க முடையாராயிருப்பினும் அவரை, பிராமணன் எனக் கூறிக்கொள்ளப்படும் குலத்தில் பிறந்த ஒரு சிறுவன் 'நீ' 'அடேய்' என வெறுக்கத்தக்க விதமாய்க் கூப்பிடுவது அநாகரீகம், கொடுமை என அறிவுறுத்துவது சுயமரியாதை. 'லோக குரு' 'குல குரு' என்ற பெயர்களைச் சூட்டிக்கொண்டு மக்கள் பொருள்களை அநியாயமாய்க் கவர்வது 'பகற் கொள்ளை' 'திருட்டுத் தொழில்' என அறிவுறுத்துவது சுயமரியாதை. போலிச்சந்நியாசம் மக்களை ஒடுக்க எழுந்தது; இல்லறம் மக்களுக்கு இதஞ் செய்ய எழுந்தது என உண்மை உணர்த்துவது சுயமரியாதை. சடங்குகள் என்பது ஒரு குலத்தாரின் பிழைப்புக்காக ஏற்படுத்தப்பட்ட பகற் கொள்ளை என இயம்புவது சுயமரியாதை. தலயாத்திரைகளால் நலம் விளைவது என்பது புரட்டு என்றும், அதனால் நன்மைகளுக்குப் பதிலாகப் பல தீமைகள் தான் கிடைக்கப்பெறுகின்றோம் என்பதையும் விளக்குவது சுயமரியாதை. இறைவன் வழிபாட்டிற்கென ஏற்படுத்தப்பட்டுள்ளவை ஒரு குலத்தாரின் நன்மைக்கும், மற்றவர்களின் அறியாமைக்கும், மூட நம்பிக்கைக்கும் துணைசெய்கின்றன என அறிவூட்டுவது சுயமரியாதை. ஒருவர் காலில் விழுந்து கும்பிட்டு ஆசீர்வாதம் பெறுவது ஆசியாகி விடாதென்பதையும், அறியாமையைத்தான் பெற்றோம் என்பதையும் அறிவிப்பது சுயமரியாதை. பொது உணவுச்சாலைகள், சத்திரங்கள் ஆகிய இடங்களில் ஒரு சாராருக்குத் தனியிடமும், மற்றவர் அனைவருக்கும் ஓரிடமும் ஒதுக்கப்பட்டிருப்பது கொடுமையென்றும், எல்லாரும் சமமேயாகலான் உண்ணவும் இருக்கவும் அனைவருக்கும் ஒரேயிடமே இருப்பது சரி என்று நவில்வது சுயமரியாதை. ஒருவர் பிர்மாவின் முகத்தினின்று பிறந்தார், வேறொருவர் காலினின்று வந்தவர் எனக் கூறப்படுவது உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கென செய்யப்பட்ட கட்டுக்கதை என்றும், அனைவரும் தத்தம் பெற்றோர் மூலமே பிறந்தது உண்மை என்பதையும் உணர்த்துவது சுயமரியாதை. தெருக்களில் நடக்க அனைவருக்கும் உரிமையுண்டேயல்லாமல் ஒரு சாரார் (தீண்டத்தகாதார் எனக் கருதப்படுவோர்) செல்வதற்கு உரிமைகிடையாதெனச்சொல்வதை கொடுமையெனக்கூறுவதுசுயமரியாதை, நல்லன கொள்ளற்கு நண்பனாயும், நல்லதல்லாதன கோடற்கு எதிரியாயும் நிற்பது சுயமரியாதை.

மேற் குறிப்பிட்டுள்ளன ஒரு சில வேயாகும். ஆராய்ச்சியிற்—அறிவிற்சிறந்த ஒருவனோ அன்றி ஒருத்தியோ 'சுயமரியாதையைத் தந்தம் அகக்கண்களான் இனிதுணரலாம். அவரவர் அறிவுகொண்டு பிற 'சுயமரியாதை' இன்னின்ன என ஆராய்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகைய சுயமரியாதையை முதலில் பெறாது 'சுயராஜ்யம்' 'தேசீயம்' எனக்கூறிக்கொண்டிருப்பின் சுயராஜ்யம் கிடைத்து விடுமோ? முதலில் சுயமரியாதை பெறுதல் வேண்டும். பின்னர் சுய

(இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க).

கோவை
ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியார்
அவர்களின்

# உருவப்பட திறப்புவிழா.

சென்ற வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கோயமுத்தூர் டவுன் ஹாலில் கோவை முனிசிபல் சேர்மனாக அநேக வருஷங்களாய் வெகு திறமையுடன் முனிசிபல் நிர்வாகம் செய்துவரும் ஸ்ரீமான் ராவ் பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியாருடைய உருவப்பட திறப்புவிழா வெகு விமரிசையாய் நடந்தது. சென்னை கவர்மெண்டு பொக்கிஷ மெம்பர் கனம் என். மாக்மைக்கேல் அவர்களால் உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது.

முனிசிபல் கவுன்சிலர்களுடைய முயற்சியால் இவ்வுருவப்படம் அழகாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அன்று மாலை வைபவத்திற்கு அநேக கனவான்கள் வந்திருந்தார்கள். டவுன் ஹால் வெகு அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வெரைட்டி ஹால் பாண்டு அச்சமயம் இனிமையான ராகங்களைப் பாடிக்கொண்டிருக்க, கனம் பொக்கிஷ மெம்பரும் அவரது பத்தினியும விஜயமானார்கள். வைஸ் சேர்மென் ஸ்ரீமான் வி. அருணாசலம் செட்டியார் அவர்களை வரவேற்று மேடையில் வீற்றிருக்கச் செய்து பின்பு கனம் முதலியார் இந்நகருக்குச் சேர்மனாக செய்திருக்கும் நல்ல வேலைகளைப்பற்றி ஓர் நல்ல பிரசங்கம் செய்தார் பின்பு கனம் பொக்கிஷ மெம்பர் ஓர் பிரசங்கம் செய்தார். அதை சுருக்கமாய் கூறுகிறேன்.

போக்கிஷ மேம்பரின் பிரசங்கம்.

இன்று மாலை இவ்வைபவத்திற்கு நானும் என் மனைவியும் அழைக்கப்பட்டது எங்களுக்கு நிரம்பவும் சந்தோஷத்தை அளிக்கிறது. கோயமுத்தூரில் ஏற்கனவே உழைத்த என்னைப் போலொத்தவர்களுக்கு மீண்டும் இங்குவரும் சிலாக்யம் மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதாகவே இருக்கும். அதிலும் இந்த நல்ல வைபவத்திற்காக நான் அழைக்கப்பட்டது இன்னும் அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

இன்று மாலை நாம் ஸ்ரீமான் ராவ் பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் அவர்களைக் கடந்த அநேக வருஷங்களாய் அவர் பொதுமக்களுக்கு செய்துவந்திருக்கும வேலைகளைப் பற்றி வைஸ் சேர்மென் ஸ்ரீ அருணாசலம் செட்டியார் உங்களுக்கு சவிஸ்தாரமாய் பிரசங்கித்திருக்கிறார். அவர் சொன்னதையே நான் திருப்பிச் சொல்லத் தேவையில்லை. ஆனால் சென்னை கவர்ன்மெண்டார் கோவை முனிசிபாலிடியின் நிர்வாகத்தைப்பற்றியும், ஜில்லாபோர்டு நிர்வாகத்தைப் பற்றியும் கூறிய சில ஷராக்களை மட்டும் எடுத்துரைக்கிறேன்.

ரஸ்தாக்கள் மிகவும் கவனிக்கப்பட்டுவந்திருக்கின்றன. பணங்களும் வெகு ஜாக்கிரதையுடன் செலவிடப்பட்டு வருகின்றன. இதற்காக கவுன்சிலர்களை யாம் வாழ்த்துகின்றோம்.

ஜில்லாபோர்டின் நிர்வாகமானது மொத்தத்தில் வெகு திருப்திகரமாகவே இருக்கிறது.

இவ்வருஷம் முனிசிபல் வேலைகளில் எல்லாம் நல்ல தேர்ச்சி இருக்கிறது.

மேற்கூறிய விஷயங்கள் ஒரு அபேட்சகரை சிலாகித்துப் பேசும் விதமாய் சொல்லப்பட்டவைகளல்ல. ஆனால் சென்னை கவர்ண்மெண்டார் தீர்க்காலோசனையுடன் கூறிய அபிப்பிராயங்கள் என்பதை கவனிக்கவேண்டும்.

கனம் முதலியாரவர்களுக்கு ராவ்சாஹிப் ராவ்பஹதூர் என்னும் பட்டங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. 1921 ஆம் கலெக்டர் மிஸ்டர் எவ். பி. இவான்ஸ் கனம் முதலியாருக்கு இப்பட்டத்தை அளிக்கும் காலத்திலும் அவரைப்பற்றி சிலாகித்து பேசியிருக்கிறார்.

நான் நேரில் கனம் முதலியாரை பத்து வருஷமாய் அறிவேன். இந்த பத்து வருஷங்களில் அவர் செய்துவந்திருக்கும் வேலைகள் எனக்கு ஓர் பெருமையே. அப்படியே இந்நகருக்கும் அவரது நல்ல வேலைகள் ஓர் பெருமைக்கிடமேயாகும். முதலில் நான் அவரை உற்சாகப்படுத்திய பொது நலச்சேவையில் அவரை ஈடுபடச் செய்த வகையில் அவரது இத்தனை வருஷகால வேலைகளும் எனக்கு ஓர் கௌரவத்தைக் கொடுக்கிறதாயிருக்கிறதென்று நான் உணர்கின்றேன். பத்து வருஷங்களுக்கு முன் நாங்கள் இருவரும் ஜில்லா போர்டில் இருந்தோம். இப்போதும் சில வாரங்களுக்கு முன் தான் நானும் அவரும் சட்ட சபையிலும் இருந்தோம் ஆனால் ஒவ்வொரு வகுப்பு ஆசனங்களில் இருந்த போதிலும் ஒருவருக்கொருவர் முகதரிசனத்துடன் வீற்றிருந்தோம். கனம் முதலியார் சட்ட சபையில் சுயாதீனக் கட்சியை சேர்ந்தவர். அவரது கட்சியை சேர்ந்தவர்கள் இப்போது நாலே நாலு பேர் தான்; ஆனால் இன்னும் சில வருஷங்களுக்குள்ளாக இதைவிட அதிக பொறுப்பான ஸ்தானத்தை அவர் வகிக்காதுபோனால் எனக்கு அது மெத்த ஆச்சரியகரமாக இருக்கும்.

வயதில் பெரியோர்களுக்கே உரியதென்று சொல்லப்படும் அவ்வளவு அநுபவ முதிர்ச்சியும் ஞானமும் பொருந்தியவராயும் இளம் பருவத்திற்கிருக்கும் சுறுசுறுப்பும் உற்சாகமும் நிறைய வாய்ந்தவராயுமிருக்கும கனம் முதலியார் எப்போதும

"நான் செய்தது சொற்பம். நான் செய்ய வேண்டிய கடமைகளோ அனந்தம" என்னும் சித்தாந்தத்தை கைக்கொண்டு வருகிறவராய் இருக்கிறார். இப்போதும் இந்த உருவப்படத்தைத் திறந்து வைப்பதில் எனக்கு அதிக ஆனந்தம். இவ்வளவாய் போற்றத்தகும் சேர்மென் கிடைத்திருக்கும் பாக்கியத்திற்காக கவுன்சிலர்களையும் கோயமுத்தூர் நகரையும் நான் வாழ்த்துகிறேன், இவ்வளவு நேர்த்தியாய் இந்த உருவப்படத்தை தயார் செய்தவரையும் நான் வாழ்த்துகிறேன்.

எச்சரிக்கை.

யாரோ ஒரு போலி ஆசாமி ஸ்ரீலஸ்ரீ கைவல்ய சாமிகள் என்ற பேரால் சிற்சில கிராமங்களில் பணம் வசூல் செய்திருப்பதாக ஒரு நண்பர் எழுதுகிறார். நமது ஸ்ரீலஸ்ரீ கைவல்யசாமிகள் யாரிடத்திலும் எந்த விதமான தயவுக்கும் யாரையும் எதிர்பார்க்கும் நிலைமையில் இல்லை என்பதையும் அம்மாதிரியான பழக்க வழக்கங்களும் அவர்களிடம் அடியோடு இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுவதோடு இம்மாதிரியாக போலிப்பெயர் தாங்கிக்கொண்டு யாராவது வந்தால் உடனே அவர்கள் விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

---

பின்பு கனம் மாக்மைகேல் உருவப்படத்தை திறக்க சபையோர் கரகோஷம் செய்து ஆனந்தித்தனர். கோயமுத்தூர் குழாய்த் தண்ணீர் திட்டத்தைப்பற்றியும் கனம் பொக்கிஷ மெம்பர் சில விஷயங்களைக் கூறினார்.

பின்பு கனம் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் தம்மை கௌரவப்படுத்தின விஷயத்தைக் குறித்து சில நேரம் பேசினார். முனிசிபல் கவுன்சிலர்களுக்கு வந்தனமளித்து அவர் கூறிய சில விஷயங்களாவது.

1917ம் வருஷத்தில் நான் கோயமுத்தூர் முனிசிபல்கவுன்சிலில் வைஸ்சேர்மனாக இருந்த காலத்தில் கனம் பொக்கிஷ மெம்பர் அவர்கள் இச்சில்லா கலெக்டராக இருந்தார். அவர் கேட்டுக் கொண்டதின் பேரில் கோயமுத்தூர் தாலூகா போர்டு பிரசிடெண்டு உத்தியோகத்தை நான் ஒப்புக்கொண்டேன். அப்படி இந்த ஊழியத்தில் ஈடுபடச் செய்ததால் எனக்கு பொதுநல சேவைக்கு விஸ்தீரணமான ஓர் வேலைத்துறை கிடைத்தது. 1921-ம் வருஷத்தில் சேர்மென் பதவிக்கு என்னை தெரிந்தெடுத்த காலத்தில் இந்நகர்வாசிகளுக்கு சேவை செய்ய ஒரு நல்ல தருணம் வாய்த்தது. அதனால் கடவுளுக்கு அவரது காலத்திலேயே திருப்பணி செய்ய பாக்யம் கிடைத்ததென எண்ணி அந்தப் பதவியை நான் ஒப்புக்கொள்ள முன்வந்தேன். நான் செய்திருக்கும் அற்ப சொற்பவேலைக்கு தாங்கள் அதாவது கனம் பொக்கிஷமெம்பர் எனக்கு ஆதியில் ஊட்டின ஊக்கமே காரணமாகும். மீண்டும் சபையோருக்கும் கவுன்சிலர்களுக்கும் என் அன்பார்ந்த வந்தனமளிக்கின்றேன்.

அதன்பின் ராவ்சாஹிப் வேணுகோபால் பிள்ளை இச்சிறப்பான வைபவத்தைப் பற்றியும் சேர்மனின் அரிய பெரிய குணாதிசயங்களைப் பற்றியும் ஒரு பிரசங்கம் செய்தார்.

ஸ்ரீமான் கே. கேஸவ பிள்ளை கனம் பொக்கிஷ மெம்பருக்கும் அவரது பத்தினிக்கும் கவுன்சிலர்களின் சார்பாய் வந்தனம் அளித்து உருவப்படத்தைவரைந்த ஆர்டிஸ்டுக்கு ஒரு தங்க மெடல் அளிக்க வேண்டுமாய் கனம் பொக்கிஷ மெம்பரைக் கேட்டுக்கொள்ள அவர் அதற்கு வெகு சந்தோஷத்துடன் இணங்கி மெடலை ஆர்டிஸ்டுக்கு அளித்தார்.

# சென்னை சட்டசபை.

## முஸ்லிம்களுக்கு உத்தியோகங்கள்.

### கான்பகதூர் ராஜக் சாகேப் தீர்மானங்கள்.

சென்னை சட்டசபையின் அடுத்த கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானங்களை கான்பகதூர் அப்துல் ரஜாக் சாகேப் கொண்டு வரப் போகிறார்.

1. சென்னை ஹைகோர்ட்டில் சென்ற 10 வருட காலமாக ஒரு முகமதியரையாவது நீதிபதியாக நியமிக்காததினாலும், முஸ்லீம்களின் நன்மைக்காக முகமதிய சட்டத்தை எடுத்துக்கூற முகம்மதியர் ஒருவர் அந்த ஸ்தானத்தில் இல்லையே என்று முகம்மதியர்கள் கவலையுடன் இருப்பதாலும், முன்னைவிட இப்போது மிகத் திறமைவாய்ந்த யோக்கியதையுள்ள முகம்மதிய வக்கீல்கள் பலர் கிடைக்கின்ற படியாலும், கூடிய சீக்கிரத்தில் ஒரு முகம்மதியரை ஹைகோர்ட் ஜட்ஜியாக நியமிக்க வேண்டுமென்று அரசப் பிரதிநிதியின் மூலமாக மன்னர்பிரானுக்கு சிபார்சு செய்ய வேண்டுமென்று இச்சபை கேட்டுக்கொள்ளுகிறது.

2. சென்னை மாகாணநகர் ஸ்மால் காஸ் கோர்ட்டுகளில் ஒரு முகம்மதியராவது நீதிபதியாக இல்லாததனாலும், திறமைவாய்ந்த யோக்கியதையுள்ள முகம்மதியர்கள் அதிகமாகக் கிடைப்பதாலும் அந்த உத்தியோகத்தில் குறைந்தது ஒரு முகம்மதியரை ஸ்திரமாக எப்போதும் ஏற்படுத்த வேண்டுமென்று இச்சபை அரசாங்கத்திற்கு சிபார்சு செய்கின்றது.

3. இந்த மாகாணத்தில் ஸ்திரமாக 38 பேரும் ஆக்டிங்காக 43 பேரும் சபார்டினேட் ஜட்ஜ்களாக இருப்பதில், மகம்மதியர்களுக்கு ஒரே ஒரு ஸ்தானம் கிடைத்திருக்கின்றபடியால், அந்த உத்தியோகங்களுக்கு திறமைவாய்ந்த முகம்மதியர்கள் பலர் இப்போது கிடைக்கின்ற படியால், இந்த மாகாணத்திலுள்ள முகம்மதிய சப் ஜட்ஜ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று சட்டசபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

ஸ்திரமாக 154 பேரும், டெம்பரரியாக 64 பேரும் ஜில்லா முன்சீப்களாக யிருப்பதில், 8 முகம்மதியர்கள் மட்டும் இருப்பதால், போதிய திறமை வாய்ந்த யோக்கியதையுள்ள பல முகம்மதியர்கள் இப்போது கிடைக்கின்றபடியால் (100-க்கு 20 முகம்மதியர்கள் நியமிக்க வேண்டுவது நியாயமென்று ஸ்டாப் செலக்ஷன் போர்டால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற பிரகாரம்) அந்த உத்தியோகங்களில் 100-க்கு 20 முகம்மதியர்களாக உயர்த்த வேண்டுமென்று இச்சட்ட சபை சென்னை ஹைகோர்ட்டுக்கு சிபார்சு செய்கின்றது:

5. கெஜட்டட் உத்தியோகஸ்தர்களில் ரெவின்யூ போர்டிலாவது கவர்ன்மெண்டிலாவது உதவி காரியதரிசி பதவியில் ஒரு முகம்மதியராவது இல்லாததாலும், அந்த உத்தியோகங்களை ஏற்று நடத்தக்கூடிய திறமைவாய்ந்த யோக்கியதையுள்ள முகம்மதிய (கெஜட்டட்) உத்தியோகஸ்தர்கள் கிடைக்கின்ற படியாலும், ரெவின்யூ போர்டிலும் கவர்ன்மெண்டு செக்ரெட்டேரியட் காரியாலயத்திலும் குறைந்தது ஒவ்வொரு முகம்மதியரையாவது உதவி காரியதரிசியாக நியமிக்க வேண்டுமென்று இச்சட்ட சபை அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

# காங்கிரஸ் தீர்மானங்கள்.

### காங்கிரஸ் தீர்மானங்களின் புரட்டுகளைப்பற்றி "திராவிடன்" தலையங்கங்கள்.

## I (26—12—27.)

காங்கிரஸ் விஷயாலோசனை கமிட்டியில் இரண்டு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளில் ஒன்று அரசியல் கமிஷனைப்பகிஷ்காரம் செய்வது. மற்றொன்று இந்திய நாடு பூரண சுவாதீனம் பெறுவது என்பது. இவ்விரண்டு தீர்மானங்களும் இந்தியப் பொதுமக்களையும் அரசாங்கத்தாரையும் ஏமாற்றுவதற்கென்று செய்த சூழ்ச்சித் தீர்மானங்களேயல்லாமல், காரியத்தில் பயனளிக்கத்தக்க தத்துவம் இவைகளில் ஒன்றுமே இல்லை என்று சொல்லுவோம்.

கமிஷனைப் பகிஷ்கரிப்பது என்பதில் உள்ள புரட்டுகளைப்பற்றி முன்னமேயே பல தடவைகளில் எழுதியிருக்கிறோம். இப்போதும் காங்கிரசில் நிறைவேற்றி இருக்கும் பகிஷ்கார தீர்மானத்தில் முக்கியமாய்க் காணப்படுவது என்னவெனில்,

1. கமிஷன்முன் சாக்ஷி கொடுக்கக் கூடாது. கமிஷனுக்கு விருந்து செய்யக் கூடாது. விருந்துகளில் கலக்கக்கூடாது.

2. சட்ட சபைகளில் தனிக்கமிட்டி நியமனத்திற்கு ஓட்டு செய்யக்கூடாது. தனிக்கமிட்டியில் மெம்பராகக் கூடாது: கமிட்டி செலவுக்கு பணம் அனுமதிக்கக் கூடாது.

3. சட்டசபை ஸ்தானங்களை விட்டு விலகக்கூடாது. மந்திரிகளைக் கவிழ்க்கவும் தேசத்திற்குக் கெடுதலான காரியங்களைச் செய்யாமல் தடுக்கவுமான காரியங்கள் தவிர மற்ற காரியங்களுக்குச் சட்டசபைக்குப் போகக்கூடாது.

5. பகிஷ்காரம் சரியாய் நடைபெற இதர கக்ஷிகளின் ஒத்துழைப்பைப் பெற வேண்டியது.

ஆகிய இந்த நான்கு முக்கிய விஷயங்களே பகிஷ்கார தீர்மானத்தின் சாரமாகும். இதை யோசிக்கும்போது அநேகமாய் நம் நாட்டுப் பார்ப்பன சூழ்ச்சியே, இதில் மிகுதியும் அடங்கி ஒவ்வொரு வரியிலும் ஒவ்வொரு எழுத்திலும் மக்களை ஏமாற்றும் தன்மையே நிறைந்திருக்கின்றது.

அதாவது, கமிஷனில் தங்களுக்கு வேண்டிய விஷயத்தை எப்படியாவது கமிஷனுக்குப்போய்ச் சேரும்படி பார்ப்பனர்கள் வெளியிட்டு விடுவார்கள். பத்திரிகையில் எழுதி அறியும்படி செய்வதும், மடாதிபதிகளைக் கொண்டு சொல்லச் செய்வதும், எந்த கக்ஷியிலும் சேராதவர்கள் என்று சில பார்ப்பனர்களைப் பிடித்து அவர்கள் மூலமாக தெரிவிக்கச் செய்துவிடுவதும், வட்ட மேஜை மகாநாடு என்பதாக ஒன்று கூட்டி அதன் அபிப்பிராயம் என்பது போல் வெளியிடுவதும், இந்தியாவுக்கு வேண்டிய சுயராஜ்ய நிர்ணயம் என்று ஒன்றை ஏற்படுத்தி அதை வெளியாக்குவதிலும் கமிஷனுக்கு போய் சேரும்படி அனுப்புவதன் மூலமாகவும் தெரிவித்து விடுவதும், ஆகிய பல சூழ்ச்சிகளால் அவர்களுக்கு வேண்டிய காரியங்கள் கமிஷனுக்கு போய்ச் சேர்ந்துவிடும். பிறகு இவர்கள் வார்த்தையை நம்பி பின்பற்றுகின்ற மற்ற கக்ஷிக்காரர்களுக்குத்தான் கட்டுப்பாடும் தடங்கலும் ஏற்படுமே தவிர, பகிஷ்காரம் என்பது தீர்மான அளவில் தான் நின்று விடும்.

அதுபோலவே தனிக்கமிட்டிக்கும் ஓட்டு செய்யாவிட்டாலும் யாரும் அங்கம் பெறாவிட்டாலும் பணம் அனுமதிக்கா விட்டாலும் பகிஷ்காரத்தில் சேராத மற்றக் கக்ஷியாரைக் கொண்டோ கவர்னருக்கும் வைசிராய்க்கும் உள்ள தனி அதிகாரங்களைக் கொண்டோ, கமிஷன் முன் சாக்ஷி சொல்லும் தன்மை நடைபெற்று விடுமே அல்லாமல் எவ்விதத்திலும் தடைப்பட்டு விடாது என்பது மாத்திரம் உறுதி. அது போலவே சட்டசபை ஸ்தானங்களும் ஒரு நிமிஷம் கூட காலி செய்ய வேண்டிய அவசியமில்லாத மாதிரியில் தந்திரமாக தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. என்னவெனில், தேசத்திற்கு கெடுதலான காரியங்கள் நடைபெறாமலிருப்பதற்கு மாத்திரம் சட்டசபையில் இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டிருப்பதால், ஒவ்வொரு வினாடியும் தேசத்திற்கு கெடுதி ஏற்படாமல் காக்கவே சட்டசபையில் இருக்கவேண்டி வரும். உதாரணமாக இரண்டு வருஷத்திற்கு முன்பு சுயராஜ்ய கக்ஷியார் இதே மாதிரி சட்டசபையை காலிசெய்து விட்டு வெளியில் வந்த பிறகு, எந்த கூட்டத்திற்குப் போகாமல் இருக்க முடிந்தது? தேவஸ்தான சட்டத்திற்கு விரோதம் செய்யப் போனதுகூட தேசத்தின் நன்மையென்றே சொல்லிக் காங்கிரசின் பேரால் ஒரு ஒற்றை மனிதர் எல்லோருக்கும் தாக்கீது அனுப்பிவிட்டார். அதுபோலவே இப்போதும் ஜஸ்டிஸ் கக்ஷியை எதிர்க்கவேண்டியது தேசத்தின் நன்மைக்கான காரியமென்று கருதி, மந்திரி

களைக் காப்பாற்ற வேண்டியது என்று சொன்னதோடு, அப்படிச் செய்ததற்குக் காரியக்கமிட்டியால் பாராட்டுத் தீர்மானமும் பெற்று விட்டார்கள். ஆகவே இத்தீர்மானத்திற்கு ஏதாவது யோக்கியப் பொறுப்பு இருக்க முடியுமா என்பதை வாசகர்களை யோசித்துப் பார்க்க விரும்புகிறோம். அது போலவே மற்றக்கக்ஷியாருடைய ஒற்றுமை சம்பாதிப்பது என்பதும். கோயமுத்தூர் தீர்மானத்திற்கு பிறகு காங்கிரசில் சேர வந்த ஜஸ்டிஸ் கட்சிக்காரரை எவ்வளவு தூரம் வரவேற்றார்கள் என்பதையும் அவர்களது ஒத்துழைப்பை எவ்வளவு தூரம் ஏற்றுக்கொண்டார்கள் என்பதையும் யோசித்தால் விளங்காமல் போகாது. எனவே ஏதாவது ஒரு காரணம் வைத்துக்கொண்டு சதா சர்வ காலமு ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களைத் தூற்றவும் இவர்கள்பேரில் பழி சுமத்திப் பாமர மக்களிடம் விஷமப் பிரசாரம் செய்யவும், தங்களுக்கு சவுகரியமிருக்கும்படி மிக்க தந்திரமாக செய்யப்பட்டிருக்கும் சூழ்ச்சியே அல்லாமல் ஒரு சிறிதாவது தேசாபிமானத்தையோ சுயமரியாதையையோ அடிப்படையாகக்கொண்டு செய்த தீர்மானம் அல்லவென்பதை தைரியமாய்ச்சொல்லுவோம். மற்றபடி இண்டிபெண்டென்ஸ் என்னும் இந்தியா முழு சுதந்திரம் அடைய வேண்டியது என்கின்ற தீர்மானத்தின் சூழ்ச்சியையும் இரகசியததையும் பற்றி மறுமுறை எழுதுவோம்.

## II- (27--12--27)


காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேறியிருக்கும் முக்கியமான இரண்டாவது தீர்மானம் "இந்தியா முழுசுயேச்சை அடையவேண்டும்" என்கிற தீர்மானமாகும். இத்தீர்மானமும் வேண்டுமென்றே பொது ஜனங்களை ஏமாற்றச் செய்த சூழ்ச்சித்தீர்மானமேயல்லாமல், இதில் ஒரு சிறிது கூட நாணயமோ நல்ல எண்ணமோ கிடையாது என்பதாக பந்தயங்கட்டி உறுதி கூறுவோம். முதலாவது இத்தீர்மானமானது ஒரு அருத்தமற்ற மொட்டைத் தீர்மானமாகும். முழு சுயேச்சை என்கின்றவார்த்தைக்கு அர்த்தம் சொல்லப் புறப்பட்டவர்கள் ஒருவருக்காவது இத்தீர்மானத்தின் கருத்தை மக்களுக்கு விளக்கவேண்டும் என்கின்ற கருத்து இருந்தது என்று சொல்ல முடியாது. இந்தியா பூரண சுயேச்சை அடைவது என்பதற்குப் பொருள் என்னவென்று கேட்போமானால், 'வெள்ளைக்காரர்களின் ஆதிக்கம் என்பது ஒரு சிறிதுமில்லாமல் இந்தியாவை இந்தியர்களே ஆண்டுகொள்வது என்பது' என்று பொருள் சொல்லுவார்கள். இதையே பொருளாகக்கொண்டு தீவிர அரசியல் வாதி என்கின்ற ஸ்ரீமான் விஜயராகவாச்சாரியாரும், ஐகோர்ட் ஜட்ஜி பதவியையும் லக்ஷியம் செய்யாமல் ஒத்துழையாமை காலத்தில் காங்கிரசினிடம ஒத்துழைத்த ஸ்ரீமான் ராஜேந்திர பிரசாத் என்பவரும், பெசன்ட் அம்மையாரும் இத்தீர்மானத்தை எதிர்க்கையில் அவர்கள் சொன்ன காரணங்கள் எல்லாம் நாம் வெள்ளைக்காரர்கள் உதவியில்லாமல் இருக்கமுடியாது ,என்கின்ற தத்துவத்தையே எடுத்துக் காட்டினார்கள். இவைகளுக்கு ஒன்றுக்காவது யாரும் சரியான பதில் சொல்லாமல் வெள்ளைக்காரர்கள் தயவில்லாமல் நிர்வாகம் பண்ணமுடியாது என்பதை ஒப்புக்கொள்வதானாலும் வெள்ளைக்காரர்களைப் பயப்படுத்த இம்மாதிரி ஒரு தீர்மானம் போடுவது நல்லது என்று சமாதானம் சொல்லி மக்களை ஏமாற்றி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இத்தீர்மானத்தினாலேயே பயப்படக்கூடிய அவ்வளவு பயங்காளிகளா நமது வெள்ளைக்காரர்கள் என்பதை இந்தக்கூட்டம் அறியவில்லையானால் இவர்களைப்போல் ஞான சூனியர்கள் வேறு எங்கும் அகப்படமாட்டார்கள் என்று தான் சொல்லவேண்டும். வெள்ளையர்களுடைய இரகசியப் போலீசும் ஒற்றர் கூட்டங்களும் கொட்டகையைச் சுற்றிக் கொண்டிருப்பதும், தீர்மானம் கொண்டு வந்த கூட்டத்தில் அநேகருக்கு மேற்படி ஒற்றர்கள் அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன். மருமகன், சகலை ஆகிய பந்துக்களாயிருப்பதும் யாரும் அறியார்கள என்று இவர்கள் சொல்ல முடியாது. அன்றியும் இதே கூட்டத்தார் இராத்திரி வேளையில் வெள்ளைக்காரர்கள் வீட்டுக்குப்போய் வெள்ளைக்காரக்கள் காலில் விழுந்து "சுயேச்சை தீர்மானத்தைப் பற்றி கோபித்துக் கொள்ளாதீர்கள்; பாமரமக்களை ஏமாற்றி ஓட்டு வாங்குவதற்காக ஏமாற்றுந் தீர்மானமாக இதைப்போட்டோமே ஒழிய உங்களை விரட்டுவதற்காக அல்ல" என்று பெண்டுபிள்ளைகளைப் போட்டுத்தாண்டி சத்தியமும் செய்து விடுவார்கள். அதோடு "நீங்களும் நாங்களும் பங்காளிகளும் சம்பந்திகளுமல்லவா? அப்படி இருக்கையில் உங்களை விரட்டி விட்டால் எங்கள் கதி என்ன ஆகும்?" என்றும் "நாங்கள் தானே உங்களை இந்த நாட்டில் நிலைக்க வைத்துக் கொண்டிருக்கிறவர்கள்" என்றும் சொல்லி, சமாதானப் படுத்துவதோடு "ஏதோ நீங்கள் அடிக்கும் கொள்ளையில் எங்களுக்கும் ஒரு பங்கு கொடுங்கள் இரண்டுபேரும் சேர்ந்து இந்திய மக்களை நசுக்கிப் பிழியலாம்" என்று சொல்லுவார்களே ஒழிய வேறு ஏதாவது இத்தீர்மானத்தைப் பற்றிய கவலை இருக்க முடியுமா என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும் இக்கூட்டத்தாருடன் பார்ப்பனரல்லாதார் கட்சியார் சேராவிட்டால் பாமர மக்களிடம் போய் "நாங்கள்" இந்தியா விடுதலை பெற வெள்ளைக்காரர்களே இந்த நாட்டில் இருக்கக்கூடாது என்று தீர்மானம் போட்டு இருக்கையில் 'ஜஸ்டிஸ்' கட்சியார் ஓயாமல் 'வெள்ளைக்காரர்களுக்கு அனுகூலமாய் இருக்கிறார்கள்" என்று சொல்லி ஓட்டு வாங்கவும், ஒரு சமயம் ஜஸ்டிஸ் கட்சியாரும் இத்தீர்மானத்தில் கலந்துகொண்டால் உடனே வெள்ளைக்காரரிடம் போய் "உங்களை விரட்டி அடிக்க ஜஸ்டிஸ் கட்சியார் இம்மாதிரி தீர்மானங்கள் போட்டிருக்கின்றார்கள்." என்று சாடி சொல்லி உத்தியோகங்கள் பெறவும் செய்துகொண்ட தந்திரமே அல்லாமல் இதில் வேறு ஒரு சின்னக்காசு உபயோகமும் கடுகளவு நாணயமும் இல்லை என்றும் இதைக்கண்டு ஏமாறக்கூடாது என்றும் பொது ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

உண்மையில் இந்தியா விடுதலை பெற வேண்டுமானால், வெள்ளைக்காரர்களை விரட்டி விடுவதாலேயே ஒன்றும் முடிந்துபோகாது என்றும், நமது நாட்டின் அடிமைத்தன்மைக்கு வெள்ளைக்காரர்கள் மட்டும் காரணமல்லவென்றும் பொது ஜனங்கள் நன்றாய் உணர வேண்டும்.

நம் நாட்டின் அடிமைத்தன்மைக்குப் பார்ப்பனர்களே முக்கிய காரணம் என்பதையாரும் மறந்து விடக்கூடாது. ஏனெனில் அவர்கள் நம் நாட்டில் கால்வைத்த நாள் முதல் கொண்டு அநேக விதமாக அதாவது கடவுள் பெயரால் மதம் என்றும், மோட்சமென்றும், ஜாதி என்றும், வர்ணம் என்றும், தர்மமென்றும் சூழ்ச்சிமேல் சூழ்ச்சி செய்து நம்முடைய மக்களிடை ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வைக் கற்பித்து ஒன்று சேர்வதற்கில்லாமல் செய்து வந்திருப்பதோடு தங்களுக்கு வேண்டியதான அரசர்களை அவ்வப்போது நமது நாட்டிற்கு கூட்டி வந்து அவர்களுக்கு இந்நாட்டில் அரசு செலுத்த, உள்உளவாய் இருந்து, உதவி செய்து, நம்மைஅவர்களுக்கும் தங்களுக்கும் அடிமைப்படுத்தி தாங்கள் கஷ்டப்படாமல் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை யாரும் உணராமல் இருக்கமுடியாது. பார்ப்பனர்களும் வெள்ளைக்காரர்களும் எழுதிவைத்த புஸ்தகங்களும் சரித்திரங்களுமே இதை ருஜுப்பிக்கும். ஆகவே இப்போது நமது விடுதலைக்கு முக்கியமாக இப்பார்ப்பனர்கள் சூழ்ச்சியும் அவர்களது பார்ப்பனீயமும் ஒழிய வேண்டியது தானே யல்லாமல் வெள்ளைக்காரர்கள் ஒழியவேண்டும்என்றுபொய்யாகப் போடும் வெறும் ஏமாற்றத் தீர்மானமல்லவென்றே சொல்லுவோம். இத்தீர்மானம் போடப்போவதாகவும் அதற்காகக் கோபித்துக் கொள்ளக்கூடாது என்றும் முன்னமேயே ஸ்ரீமான் சத்தியமூர்த்தி போன்றவர்கள் வெள்ளைக்காரர்களிடம நேரில் போய் சொல்லி விட்டு வந்திருக்கும் விஷயம் பொய்யென்று சுலபத்தில் சொல்லிவிட முடியாது. ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கவர்னரையும், கவர்னர்ஜனரலையும் போய்ப் பார்ப்பதும் ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார் காங்கிரஸ் பதவிகளை ராஜீனுமா செய்வதும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரும் சர் சி பி அய்யரும் தினமும் கட்டிப் புரளுவதும் தெரிந்தவர்கள் இந்த பூர்ண சுயேச்சைத் தீர்மானத்தை நம்ப முடியுமா என்தான் கேட்கின்றோம். வாஸ்தவத்திலேயே இக்கூட்டத்தாருக்கு பூரண சுயேச்சையில் ஆசை யிருக்குமானால், பூரண சுயேச்சைக்கு ஆதாரமான ஸ்ரீமான் ஆர் கே ஷண்முகம்செட்டியாரின் தீர்மானத்தை இதுவரையில் வெளியில் கொண்டு வராமல் குப்பைத்தொட்டிக்குப் பக்கத்தில் வைத்திருப்பார்களா என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் தீர்மானத்தின் தத்துவம் என்ன வென்றால் இந்தியா விடுதலை பெறுவதற்கு மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வையும், அடிமைத்தனத்தையும் கற்பிக்கும் படி

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞூ மார்கழி 17-உ

## காங்கிரஸ் என்னும் ஏமாற்றுந் திருவிழாவின் முடிவு.

சென்ற வாரம் சென்னையில் ஏமாற்றுந் திருவிழா என்பதாக பெயரிட்டு தலையங்கமெழுதியிருந்தோம். இவ்வாரம் அத்திருவிழா முடிந்து விட்டதால் அதைப்பற்றி சில வார்த்தைகள் கூறுவோம்.

நாம் சென்ற வாரம் கூறியபடியே காங்கிரஸ் என்பது பாமர மக்களை படித்த கூட்டத்தார் ஏமாற்றுவதற்கென்று ஏற்படுத்திக்கொண்ட ஸ்தாபனம் என்றும் அதிலும் அப்படித்த கூட்டத்தார் என்பதில் முக்கியமானவர்கள் நமது தென்னாட்டுப் பார்ப்பனர்களே என்றும் அவர்கள் இஷ்டப்படியெல்லாம் ஏறக்குறைய காங்கிரஸ் ஆரம்பமான கால முதல்கொண்டு ஆட்டப்பட்டு வந்திருக்கிறது என்றும் காங்கிரஸ் என்பதாக ஒன்று நமது நாட்டில் ஏற்பட்டபிறகே மக்களின் ஒற்றுமை குலையவும் ஒழுக்கங்கெடவும் ஏழை மக்களுக்கு பல வழிகளிலும் கஷ்டம் ஏற்படவுமான காரியங்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றதென்றும் எழுதி வந்திருக்கின்றோம்.

நிற்க, இவ்வருஷம் சென்னையில் நடந்த காங்கிரசானது காங்கிரசையும் பார்ப்பனர்களையும் பற்றி நாம் இவ்வளவு காலம் எழுதி வந்ததையும், பேசி வந்ததையும், உள்ளங்கை நெல்லிக்கனி போல் மெய்ப்பித்து விட்டது என்றே சொல்லுவோம்.

இக்காங்கிரசில் நிறை வேற்றி இருக்கும் தீர்மானங்கள் முக்கியமானது என்று சொல்லத்தக்கது என்பவைகள் நான்கே என்று சொல்லலாம். அதாவது, ஒன்று சைமன் கமிஷன் பகிஷ்காரம். இரண்டு நமது நாடு வெள்ளைக்காரர்கள் சம்மந்தமில்லாமல் பூரண சுதந்தரம் அடைய வேண்டும் என்பது. மூன்றாவது பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்காரம் செய்யவேண்டும் என்பது. நான்காவது இந்து முஸ்லீம் ஒற்றுமை, ஆகியவைகளாம். இவற்றில் முதல் இரண்டு தீர்மானங்களின் புரட்டுகளைப் பற்றியும், திராவிடன் பத்திரிகையில் வரிசையாக காணப்பட்ட இரண்டு தலையங்கங்களையும் காங்கிரஸ் தீர்மானங்கள் என்னும் தலைப்பில் இதில் பிரசுரித்திருக்கின்றோம். ஆதலால் நேயர்கள் தயவு செய்து அவற்றை கவனமாய் படித்துப்பார்க்கும்படி வேண்டுகின்றோம். மற்ற இரண்டு தீர்மானங்களைப்பற்றிய புரட்டுகளை அடுத்த வாரம் வெளியிடுவோம்.

தமிழ் நாட்டிலுள்ள அநேக பத்திரிகைகளில், 'திராவிடன்' 'குடி அரசு' என்கின்ற இரண்டு பத்திரிகைகள் நீங்கலாக அநேகமாய் மற்ற பத்திரிகைகள் எல்லாம் ஒரே மாதிரியாக காங்கிரசைப் புகழ்ந்தும் தீர்மானங்களைப் பாராட்டியும் எழுதி வந்திருக்கின்றனவே யல்லாமல் ஒன்றாவது உண்மையை வெளியிடவில்லை என்பதை தைரியமாய்ச் சொல்லுவோம். ஏனிப்படிச் சொல்லுகின்றோமெனறால் அநேக பத்திரிகைகள் உண்மையை அறிந்திருந்தும் வேண்டுமென்றே மறைத்து வைத்து தங்கள் தங்கள் சுயநலத்தையே பிரதானமாகக் கொண்டு பார்ப்பனர்களை பின்பற்றுகின்றன என்கின்ற முடிவினாலேயே எழுதுகின்றோம்.

தவிர, எவ்வளவு தான் தமிழ் நாட்டுப் பத்திராதிபர்கள் உண்மையை மறைத்து மறைத்து பார்ப்பனர்களுக்கு அநுகூலமாய் எழுதி வந்திருந்தாலும் இவ்வருஷம் நடந்த காங்கிரசின் மூலமாக தமிழ் நாட்டின் எல்லா பக்கங்களிலிருந்தும் சென்னைக்கு வந்திருந்த பிரதிநிதிகளில் அனேகர் உண்மையை உணர்ந்து கொண்டார்கள் என்றே சொல்லுவோம்.

எல்லா பத்திரிகைகளையும் தங்கள் வசப்படுத்திக்கொண்டு விட்டோம் என்கின்ற தைரியத்தாலோ அல்லது நமக்கு விரோதமாய் எந்தப்பத்திரிகைக்காரனும் எழுதி விட்டுப் பிழைத்திருக்க முடியாது என்கின்ற ஆணவத்தினாலோ தலைகால் தெரியாமல் ஆடினதினால் உண்மை வெளியாக நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

காங்கிரசில் நிறைவேற்றப்பட்டதாய் சொல்லப்பட்ட மேற்படி தீர்மானங்களில் ஒன்றாவது யோக்கியமாய் நிறைவேற்றப்படவில்லை என்றும் எல்லாம் தீர்மானமாக்கப் பட்டதாக குறித்துக் கொள்ளப்பட்டதென்றும் ஆக்ஷேபணைகளையும், ஆக்ஷேபிப்பவர்களையும், சூழ்ச்சியினாலும், தந்திரத்தினாலும், ஒழுக்க மற்ற நடவடிக்கையினாலும் நிராகரித்தும் மறைத்தும் விட்டார்கள் என்றும் தெரிந்துவிட்டது.

இவ்வருஷத்திய காங்கிரஸ் டெலிகேட்டுகள் எல்லாம் கணக்குப் பார்த்தால் 100-க்கு 76-பேர்கள் சென்னை மாகாணத்துக்காரர்களே. யாவர்கள் பாஞ்சாப்புக்கும், பர்மாவுக்கும் மற்ற மாகாணங்களுக்குமாக சென்னைப் பார்ப்பனர்களே நியமனம் செய்யப்பட்டார்கள். எந்தெந்த மாகாணங்களிலிருந்து பிரதிநிதிகள் வரவில்லையோ அவற்றிற்கெல்லாம் அநேகமாய் சென்னைக் காரர்களே பர்த்தி செய்யப்பட்டார்கள். அவ்வளவு தூரம் பார்த்தி செய்ய எப்படி சௌகரியம் கிடைத்த தென்றால் பிரதிநிதிக்கட்டணம் ஒரே ரூபாயாகப் போய்விட்டதாலும் ஒருவர் ஒரு ரூபாய் கொடுத்து பிரதிநிதியாகப் பதிவு செய்து கொண்டு டிக்கட் பெற்று விட்டால் அதை 10 அல்லது 15 ரூபாய்க்கு விற்க சௌகரியமிருந்ததாலும் ஏறக்குறைய எல்லா ஸ்தாபனங்களையும் பூர்த்தி செய்ய சௌகரியமேற்பட்டது. இதனால் காங்கிரஸ் பிரதிநிதிகள் என்பவர்கள் ஒரு ரூபாய்க்கு வாங்கின டிக்கட்டை 10 ரூபாயிக்கு விற்கலாம் என்கின்ற யோகசாலிகளாகவே இருக்கவும் இந்த டிக்கட்டை வாங்கிக்கொண்டு உள்ளே போனவர்கள் பேசாமல் வேடிக்கை பார்த்துவிட்டும் வந்ததல்லாமல் தீர்மானங்களைப் பற்றி யாதொரு காரியமும் செய்ய போக்கியதை அற்றவர்களாகவுமே போய் விட்டார்கள்.

தவிர காங்கிரசில் தீர்மானிக்க என்று அநேகர் அநேக தீர்மானங்கள் அனுப்பியிருந்தார்கள். அத்தீர்மானங்களை வெளியில் கொண்டுவாராமல் இருப்பதற்காக எவ்வளவு தூரம் அக்கிரமங்கள் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து தங்களுக்கு வேண்டாத் தீர்மானங்களையெல்லாம் அடியோடு மறைத்துவிட்டார்கள்.

ஸ்ரீமான் R. K. ஷண்முகம் செட்டியார் அவர்கள் ஒரு தீர்மானம் அனுப்பியிருந்தார்- அது காங்கிரசின் லக்ஷியத்தில் மக்கள் சமத்துவமும் ஒன்றாய் இருக்கவேண்டுமென்கின்ற தத்துவம் கொண்டது. அதை எத்தனையோபேர் எத்தனையோ கஷ்டப்பட்டுப்பார்த்தும் வெளிக்கு கொண்டுவர முடியவே இல்லை. தீர்மானம் அனுப்பிய ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் இந்திய சட்டசபை மெம்பர் காங்கிரஸ் கக்ஷிக்கு கொறடா என்று சொல்லும் முக்கிய பதவி பெற்றவர் அவர் வடநாட்டுத் தலைவர்களை யெல்லாம் நன்றாய் அறிந்தவர். இவ்வளவும் அல்லாமல் பார்ப்பனர் அல்லாதாருக்கு விரோதமாக பார்ப்பனர்களுடன் கூடிக்கொண்டு ஊர் ஊராய்த்திரிந்து பார்ப்பனர்களுக்கு அநுகூலமாய் ஓட்டுவாங்கிக் கொடுத்தவர் தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டிக்கு காரியதரிசியாய் இருந்தவர்.

இவ்வளவு யோக்கியதை உள்ளவர் எவ்வளவோ முக்கியமான தீர்மானம் அனுப்பி அது வெளியில் வரவில்லையானால் வேறு யாரால் என்ன காரியம் நடத்த முடியும். ஸ்ரீ ஷண்முகம் செட்டியார் இத்தீர்மானத்தை வெளிக்கு கொண்டுவர டாக்டர் அன்சாரியிடமும் ஸ்ரீமான் கோஸ்வாமியிடமும் மற்றும் பல தலைவர்களிடமும் சிபார்சு பிடித்தும் பார்த்தார் மற்றும் பலர் சிபார்சு செய்தும் பார்த்தார்கள். ஒரு பலனும் ஏற்படாமல் நரிதின்ற கோழி கூவ முடியுமா என்பது போல மறைந்து விட்டது.

மற்ற தீர்மானங்கள் ஒழுங்கு முறைகளைக் கூட கவனியாமல் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. எனவே இந்த காங்கிரசு யாருடைய காங்கிரசு என்பதில் இனியும் அறிவாளிகளுக்குசந்தேகமிருக்க நியாயமிருக்காது.

தவிர நிர்மாணதிட்டங்களைப் பற்றியாவது மற்றும் வேறு அவசியமான காரியங்களைப் பற்றியாவது ஒரு வார்த்தைகூட பந்தலில் நிகழவே நேரமில்லை!

உபசாரணைத் தலைவர் உபன்யாசத்திலும் வகுப்பு வேற்றுமை பிராமணர் பிராமணரல்லாதார் பிரசனை என்பவைகளைப்பற்றிப் பேசினவர்கள் அதை ஒழிக்கும் விஷயத்தில் கடுகளவு முயற்சியும் எடுத்துக் கொள்ளவேயில்லை. காங்கிரஸ் என்பதை வருணாசிரம மகாநாடு என்பது போலவே நினைத்து எல்லா இடங்களிலும் உள்ள காங்கிரஸ் ஸ்தாபனங்களையும் அக்கிரமமான வழிகளில் தங்கள் அடிமையாக்கி எல்லா ஊர்களிலும் உள்ள பார்ப்பனர்களையே பிரதிநிதிகளாக்கி அவர்களையே கொட்டகைக்குள் நிரப்பி தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொண்டார்கள் என்பதை மறைக்க முடியாது.

பார்ப்பனரல்லாதார்களில் காங்கிரசுக்கு போன முக்கியஸ்தர்கள் யார் என்றோ அல்லது அங்கு யாருக்கு செல்வாக்கு இருந்தது என்றோ பார்ப்போமானால் ஸ்ரீமான்கள் முத்துரங்க முதலியார், O. கந்தசாமிசெட்டியார், வாதராஜுலு நாயுடு, குப்புசாமி முதலியார், அண்ணாமலை பிள்ளை முதலிய வெகு சிலரே என்றே சொல்ல வேண்டும். அதுவும் காங்கிரசுக்கு வேண்டிய கூட்டம் வந்துவிட்டது என்கின்ற எண்ணம் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்டவுடன் ஸ்ரீமான்கள் வரதராஜுலுவையும் குப்புசாமி முதலியார் அண்ணாமலை பிள்ளை போன்றவர்களையும் கொஞ்சம்கூட லக்ஷியம் செய்யவே இல்லை. அவர்கள் பந்தலுக்கு வெளியில் கூட்டம் போட்டு இந்த பார்ப்பனத் தலைவர்களை மானங்கெடப் பேசிக்கொண்டே இருந்தார்கள். வட நாட்டிலிருந்து வந்தவர்களுக்கு தமிழ் தெரியாது என்கின்ற தைரியத்தால் இதைப்பற்றி பார்ப்பனர்கள் ஒருசிறிதுகூட கவலை செலுத்தவே இல்லை.

ஆகவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைவைத்துக்கொண்டு தமிழ்நாட்டில்பார்ப்பனரல்லாதார் கக்ஷிக்கு விரோதமாக எவ்வளவு தூரம் வேலைசெய்ய முடியுமோ அவ்வளவு தூரம் வேலை செய்யவே போகின்றார்கள். அதற்கு அனுகூலமாக இக்காங்கிரசின் பலனாய் பதினாயிரக் கணக்கான ரூபாய் மீதியாகும் என்பதாகச் சொல்லிக்கொள்ளப் படுகின்றது.

இந்தப் பணங்களை வழக்கம்போல் பல காலிகளுக்கு கொடுத்து எவ்வளவு தூரம் நம்மீது அவர்களை உசுப்படுத்திவிட முடியுமோ அவ்வளவு தூரம் உசுப்படுத்திவிட்டு பெருத்த ஆர்ப்பாட்டம் செய்யப்போகிறார்கள் என்பது மாத்திரம் உறுதி. அதற்குச் சாக்காக சொல்லிக்கொள்ள ராயல் கமிஷன் பஹிஷ்காரப் பிரசாரம் என்பதாக ஒன்றைத் தீர்மானித்துக் கொண்டாய் விட்டது.

இவையெல்லாம்விட பார்ப்பனர்களுக்கு மற்றொரு சவுகரியம் என்னவென்றால் பார்ப்பனர்களின் கால் பெருவிரலடியில் கிடக்கின்றது என்று சொல்லத்தக்கதான தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் அதன் நிர்வாகக் கமிட்டியுமே ஆகும்.

நிர்வாகக் கமிட்டியைப்பற்றி நாம் சொல்லவே வேண்டியதில்லை. உதைத்த காலுக்கு முத்தம் கொடுக்கும் பெருந்தன்மைவாய்ந்த ஸ்ரீமான்கள் கந்தசாமி செட்டியார், ஜார்ஜ் ஜோசப், வரதராஜுலு போன்ற மணிகள் பார்ப்பனர்கள் இஷ்டம் போல் நடக்க வேண்டுமென்கின்ற அவசியத்தோடு பார்ப்பனரல்லாதார் கக்ஷியை வைவதன் மூலமாகவே பெருமை பெறவேண்டும் வாழவேண்டும் என்கின்ற தத்துவத்தை அடிப்படையாய் கொண்டவர்கள். அதுமாத்திரமல்லாமல் தாங்கள் ஒதுங்குவதற்கு இதைத்தவிர வேறு இடமில்லை என்றும் முடிவு செய்து கொண்டும் இருக்கின்றவர்கள். ஆகவே காங்கிரசும் காங்கிரசில் மிஞ்சிய பணமும் காங்கிரசில் சேர்ந்த கனவான்களும் பார்ப்பனரல்லாதார்களின் கக்ஷிக்கும் முன்னேற்றத்திற்கும் அவர்களது சுயமரியாதைக்கும் எமன்களாகத் தோன்றி யிருக்கின்றது என்று சொல்லி இதை முடிப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று சொல்லுவோம்.

## மற்ற மகாநாடுகள்.

### ஆசாரத் திருத்த மகா நாடு.

இதற்கு ஸ்ரீமான் கே. நடராஜன் அக்கிராசனாதிபதி- இவர் வாயால் வெகு வேகமாகப் பேசிவிட்டு காரியத்தில் ஒன்றும் செய்யக்கூடாது என்பதையே கருத்தில் வைத்து தலைமை உபன்யாசம் செய்தார். இம்மகாநாட்டுக்கு காரியதரிசி ஸ்ரீ கந்தசாமி செட்டியார்- இவர், ஜஸ்டிஸ் கக்ஷியையும் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கத்தையும் சேர்ந்தவர்கள் ஆசாரத் திருத்த மகாநாட்டுக்கு பிரதிநிதிகளாக வரக்கூடாது என்றும், மீறிவந்தால் அவர்களுக்கு பிரதிநிதிச் சீட்டு கொடுக்க முடியாது என்றும், காரியதரிசி ஹோதாவிதால் எழுதிவிட்டார்- அக்கடிதம்சமீபத்தில் பிரசுரமாகும்.

மகாநாட்டுக்குச் சென்ற ஸ்ரீமான் ஆரியா அவர்களை பார்ப்பனர்கள் அவமானப்படுத்தினார்கள்- இதை கண்டிக்க அக்கிராசனாதிபதிக்கு சக்தியோ சௌகரியமோ சம்மதமோ இல்லாமல் போனதோடு தந்திரமாக சமாதானம் சொல்ல முன் வந்தார்.

### சமஸ்தானப் பிரஜைகள் மகா நாடு,

இதற்கு ஸ்ரீ சினிவாசய்யங்கார் தலைவர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி உபசாரணைத் தலைவர்- இவர்கள் தீர்மானம் எழுதி ஓட்டு எண்ணாமலே நிறைவேறி விட்டதாக தீர்மானம் செய்தவர்கள்- ஒரு மாதத்திற்கு முன் ஒரு மகாநாடு கூடி இருக்க இப்போது மேற்படி இரண்டு பேர் சேர்ந்து மகாநாடாக்கி தீர்மானம் செய்ததாக பேர் செய்து விட்டார்கள்- இதனால், சுதேச சமஸ்தானங்களிலும் பணம் கொள்ளை அடிக்கலாம், தங்கள் இனத்தாருக்கு உத்தியோகம் சம்பாதித்துக்கொடுக்கலாம், என்பது தான் மகாநாட்டின் முக்கிய நோக்கம் என்று சொல்ல வேண்டும்

### பத்திராதிபர்கள் மகாநாடு.

இது, ஸ்ரீமான் வாதராஜுலு பத்திரிகை விற்க வாடகைக்கு வாங்கிய ஒரு கை அகல இடத்தில் திடீரென்று கூட்டப்பட்டது. இதில் என்ன நடந்தது, எத்தனை பேருக்கு அங்கு இடமிருந்தது, யார் யார் வந்தார்கள், என்பவைகளைப் பற்றி பேசாமல்இருப்பதே எல்லோருக்கும் நன்மையாகும், இல்லாவிட்டால் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி சினிவாச அய்யங்கார் மகாநாடுகளுக்கு யோக்கியதை வந்துவிடும்.

இதுபோல இன்னும் எத்தனையோ மகாநாடுகள் ஒவ்வொன்றும் கேட்கக் கேட்க அற்புதமாகத்தான் இருக்கும். இவர்களையெல்லாம் குற்றம் சொல்ல நாம் இவைகளை எழுத முன் வரவில்லை; நமது நிலைமையைவிளக்கவே எழுதினோம்.

### ஜஸ்டிஸ் கக்ஷி.

வடநாட்டில் இருந்து வந்த முக்கிய தலைவர்கள் எனப்போர்கள் எல்லோரும் கக்ஷித் தலைவர் பனகால் ராஜா அவர்களைப் பார்த்து பேசினார்கள்- பேசினதின் முக்கிய தத்துவம் என்னமாய் இருக்கலாம் என்றால், பஹிஷ்கார வியாபாரத்தில் நீங்களும் ஒரு கூட்டாக சேர்ந்து கொள்ளுங்கள், வருகிற லாபத்தில் உங்களுக்கும் ஒரு பங்குகொடுக்கின்றோம் என்றுதான் சொல்லி இருப்பார்கள்- இதைவிட வேறு பேசத்தகுந்த காரியம் எதுவுமிருப்பதாக நாம் நினைக்கவில்லை. இதை நம்பி பனகால் ராஜாவும் காங்கிரசுக்கு போய் இருந்தார்-கொட்டகையில் இருந்த ஜனங்கள் இவரைப் பார்த்து செய்த ஆரவாரம் அந்த கொட்டகையில் ஸ்ரீ காந்தி முதல் யாருக்குமே செய்யவில்லை என்று அநேகர் சொன்னார்கள் -இதைப் பார்த்த ராஜா சாயபுக்கு காங்கிரசில் சேர்ந்தால்தேவலாமென்று தோன்றுவதில் அதிசயமில்லை-

### காங்கிரஸ் வரவேற்புத் தலைவர்,

வரவேற்புத் தலைவரை, வடநாட்டு தலைவர்களில் யாருக்குமே யாரும் அறிமுகப்படுத்தி வைக்கவில்லையாம்- இதில் ஒன்றும் அதிசயமிருப்பதாக நினைக்க இடமில்லை-

### காங்கிரஸ் சாப்பாடு.

வேளை ஒன்றுக்கு எட்டணா பத்தணா என்பதாக வாங்கிக்கொண்டு நாலணா பெறக்கூடிய சாப்பாடு கூடப் போடவில்லை என்று எல்லோரும் புகார் சொன்னார்கள்:

### பத்திராதிபர்களுக்கு சௌகரியம்-

'இந்து' 'சுதேசமித்திரன்' இரண்டு போக மற்றவர்களைப்பற்றி யாரும்கவலைப்படவில்லையென்றும் அவர்களுக்கு போதிய சௌகரியம் செய்யவில்லை என்றுமே புகார்-

### தீர்மானங்களைப்பற்றி பேசியவர்கள்-

பிரிட்டிஷ் சாமான்களை பஹிஷ்கரிக்கவேண்டும் என்கின்ற தீர்மானத்தைப்பற்றி பேசியவர்களில் முக்கியமானவர் ஒரு பத்திரிகைக்கு பிரிட்டிஷ சாமான்களுக்கு விளம்பரம் சம்பாதித்துக் கொடுக்கும் கனவானும்- ஆகவே தீர்மானங்களுக்கு எவ்வளவு தூரம் எதிரிகள் மதிப்பு கொடுப்பார்கள் என்பது இதிலிருந்தே விளங்கும்.

## அந்தோ! ஹக்கிம் அஜ்மல்கான்!

இந்து முஸ்லீம் ஐக்யத்தில் மிக்க ஊக்கங்கொண்டிருந்தவரும், பூமானும், ஏழைகளுக்க ன்பரும் நாட்டு வைத்யத்தில் பற்றும் தேர்ச்சியும் உடையவரும், ஆமதாபாத் காங்கிரசில் தலைமை வகித்தவரும், உள்ளும் புறமும் ஒரு படித்தாய் இந்திய நாட்டு விடுதலைக்கு அருந்தவமியற்றியவருமான அருந்தேச பக்தர் அக்கீம் அஜ்மல்கான் அவர்கள் டிசம்பர் 28 தேதி இரவு ராமபுரியில் தமது 57 ம் வயதில் மண்ணுலகை நீத்ததாகக்கேட்டு ஆற்றொணத்துயர் அடைகின்றோம். அவர் தம் குடும்பத்தாருக்கு நமது அனுதாபம்.

இறைவனடி வாழ்க!

வைக்கம் வீரரும், தமிழ் மக்களது வீர சிங்கமுமான

## திருமிகு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களுக்கு,

பூவாளூர் 'முத்து ராஜ மகாஜன சங்கத்தார்' வாசித்தளித்த

## வரவேற்புப் பத்திரம்.

அன்பே அறிவு, அறிவே அன்பு என்று உணர்ந்தும் அன்பு சால் அறிஞ!

உங்கள் வரவு நல்வரவாகுக! உங்கள் இனிய வரவைக் கண்டு என்னென்று மகிழ்வேம்? வாடிய பயிர்க்கு வளர்தரு மழை யென்று கூறுவேமா? அக இருளை நீக்கும் அறவுரை வழங்கும் அருணன் என்பேமா? மனமாசகற்றும் மாசிலாமணி யென்பேமா? யாங்களனைவரும் உங்களைக்கண்டு தரிசிக்கும்படி எங்கள் ஊருக்கு எளிதில் எழுந்தருளியுள்ளீர்கள். இவ்வாறு நீங்கள் எழுந்தருளவும் யாங்கள் கண்டு மகிழவும் செய்வித்த நல்வினையினை என்னென்று நவில்வேம்.

நிலம் பெயரினும் நிலை பெயரா நின்மல!

திருவாங்கூர் ராஜ்பத்திலே வைக்கம் என்னும் ஊரிலே தமிழர்கள் நலம் பெறுவதற்கென்று நாளும் உழைத்து, உயிர்க்கே உறுகண் நேர்ந்த விடத்தும் உலையாத முயன்று, கடையில் வெற்றியை எய்தி, அதன் காரணமாக "வைக்கம் வீரர்" என வீரபட்டம் பெற்ற வீர சிங்கமே வருக! வருக!!

தமிழரது அடிமை வாழ்வை அகற்ற அன்றும் இன்றும் அருந்தவம் புரியும் அந்தணாளா!

எங்ஙனம் தமிழ் மக்கள் படும் பாட்டைக் கண்டு பரிவு கொண்டீர். அவர்கள் வறுமையைக் கண்டு வாட்ட முற்றீர். தீண்டாமையைக் கண்டு தியங்கினீர், உங்கள் உள்ளத்தை உருகச் செய்வன ஒன்றா இரண்டா! பலவே.

செல்வத்திற் சிறந்த உத்தம!

அடிமை வாழ்வு என்னும் இருளறையின் கண்ணே அடைத்துப் பூட்டப்பட்டுத் தூங்கிக்கொண்டிருந்த எங்களை சுயமரியாதை என்னும் திறவுகோல் கொண்டு திறந்து தட்டி எழுப்பி வெளியேற்ற அவதரித்த கண்ணிய சீல! உங்களைப் பெரிதும் வரவேற்கின்றோம்.

இங்ஙனம்,
முத்துராஜ மகாஜன சங்கத்தார், பூவாளூர்.

## M. S. M. ரயில்வே உத்தியோகஸ்தர்கள் மூன்றாவது மகாநாடு.

இம்மகாநாடு நாளது வருஷம் டிசம்பர் மாதம் 31-தேதியிலும், 1928-வருஷம் ஜனவரி மாதம் 1-தேதியிலும், சென்னை எழும்பூர் ஏரியில் அமைத்துள்ள இந்திய தேசியக் காங்கிரஸ் பந்தலில் கூடும்.

அது சமயம் டெல்லி சட்டசபை அங்கத்தினரும் அகில இந்திய தொழிலாளர் காங்கிரஸ் மாஜி தலைவருமான ஸ்ரீமான் திவான் சமன்லால் அவர்கள் தலைமை வகிப்பார்.

M. C. ஞானமுத்து,
ஜெனரல் செக்ரெடரி.

## கொக்கிரகுளம் சகோதர ஐக்கிய சங்க ஆண்டு விழா.

திருநெல்வேலி கொக்கிரகுளம் செல்வ விநாயகர் தெருவில் 18—12—27 இரவு 9 மணிக்கு ஐக்கிய சங்கத்தின் 6 வது வருஷப் பூர்த்திவிழா பாளையங்கோட்டை முனிசிபல் கவுன்சிலரான ஸ்ரீமான் எம். தேவதாசன் பி. ஏ. பி. எல். அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் கல்வி, சுத்தம் நமது கடமைகள், சங்கங்கள் என்பவைகளை பற்றி சிலர் உபந்யாசங்கள் செய்தனர்.

இறுதியில் கனம் அக்கிராசனர் ஷை சங்கம் இதுவரை செய்துள்ள வேலைகளைப் பாராட்டி முடிவுரை கூறினர். அதன் பின் அக்கிராசனருக்கும் அவையோருக்கும் நன்றிகூறியபின் சிற்றுண்டி தாம்பூலம் சகலருக்கும் வழங்கப்பட்டு பஜனை கோஷ்டி நடந்து 12 மணிக்கு கூட்டம் இனிது கலைவுற்றது.

(9-ம் பக்கத் தொடர்ச்சி).

யான ஜாதி வித்தியாசங்களே தடையாய் இருப்பதால் ஜாதி வித்தியாசம் ஒழியவேண்டுமென்பதும் காங்கிரசின் கொள்கைகளில் ஒன்றாய் இருக்க வேண்டும்'' என்பதுதான் இதை வெளியில் கொண்டுவராமல் மூடி ஏமாற்றுவதுடன்பார்ப்பனரல்லாதவர்களிலும் இதற்கு எதிரிடையாய் இருக்க ஆட்களைச் சேர்த்து வருகிறார்கள் என்பதாகத் தெரியவருகின்றது.

இதிலிருந்தே இவர்கள் யோக்கியதை விளங்கவில்லையா என்று கேட்கின்றோம். வரவேற்புத்தலைவர் பிரசங்கத்திலும் வகுப்பு வேற்றுமைகள் ஒழியவேண்டும் என்று பேசிவிட்டு அதற்கு ஆதாரமான தீர்மானங்களைப் பற்றியோ அல்லது வேண்டுவதைப்பற்றியோ காரியத்தில் ஒன்றும் செய்யாமல இருப்பதினாலேயே இவர்கள் இருவர்களும் பார்ப்பனக்கங்காணிகள் என்று சொல்வதை யாராவது தடுக்கமுடியுமா என்று கேட்கின்றோம்.

மநு நீதி போன்ற அதர்ம நீதி உலகில் மற்றொன்றும் இல்லை.

## நாகூர் ஹிந்து மதாபிமான சங்கத்தின் தற்புகழ்ச்சிக்கு

# அறிவுறுத்தல்.

இச்சங்கக் காரியதரிசி 12—12—27-ல் பாரதமித்திரனில் "விஷம பிரசார கொள்கையின் தோல்வி, ஹிந்து மதாபிமான சங்கத்தின் வெற்றி" என்று தலையங்கமுள்ள ஓர் கட்டுரை எழுதி இருக்கிறார்கள்.

அதில் வைக்கம் வீரரை தேசத்துரோகியென்றும், போலி தேச பக்தரென்றும், அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டு சில பாவிய போலி ஹிந்துக்கள் விஷமப்பிரசாரம் செய்கிறார்களென்றும், தங்களுடைய சங்கம் ராமாவதாரம் போல் ராக்ஷஸவம்சத்தை ஒழிக்க வந்த ஞான சூரியனென்றும் எழுதியிருக்கிறார்கள்.

தேசத்துரோகி என்றால் தன்னுடைய சுயநலத்திற்காவது, தன்னுடைய வகுப்பின் நலத்தை உத்தேசித்தாவது அத்தேசவாசிகளில் ஏனையோரை எப்பொழுதும் அடிமைத் தனத்தில் அமிழ்த்த யோசிப்பவனே யாகும். தேசபக்தனென்று அல்லது தேசத்தின் முன்னேற்றத்தை கவனிக்கிறேனென்றுரைத்து தனது வகுப்புக்கு பாடுபடுகிறவன் போலி தேசபக்தனுவன்.

இந்துக்களின் முன்னேற்றத்திற்காக சங்கம் ஏற்படுத்தியிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு ஒடுக்கப்பட்ட ஜாதியையும், தாழ்ந்த வகுப்பாரையும் சேர்க்கமாட்டோமென்று சட்டமேற்படுத்தியவர்கள் போலி தேசபக்தரா அல்லது எல்லாருக்கும் சம உரிமை கொடுக்கவேண்டுமென்று சொல்பவரும் அதற்காக பிரதிதினமும் உழைப்பவரும் போலி தேசபக்தரா? என்று வாசகர்களே அறியட்டும். நான் முகத்தில் உதித்ததால் உயர்வென்றும்; நீ காலில் உண்டானதால் தாழ்வென்றும் சொல்லுபவர் தேசத்துரோகியா? அல்லது அருட் பெருஞ்சோதியாகிய கடவுளுக்கு அவருடைய மக்களாகிய நாமெல்லாரும் சமமென்று சொல்பவர் தேசத்துரோகியா? நம்மிடத்தில் வசூலித்த பணத்தில் ஒரு பகுதியை பார்த்ததற்கு ஒரு பிராயசித்தமும், பேசினதற்கு ஒரு பிராயசித்தமும், நமது ரூபாயை உபயோகிக்கவேண்டியதற்கு ஒரு பிராயசித்தமும் செய்வதில் உபயோகப்படுத்தியவர் தேசத்துரோகியா அல்லவா? ஜனத்துரோகியா அல்லவா? சமூகத்துரோகியா அல்லவா? என்பதை பகுத்தறிவுள்ளவர்களே அறியட்டும்.

மிருகத்தையும் மனிதனையும் வேறுபடுத்துவது பகுத்தறிவு. ஒருவன், இது நல்லது, கெட்டது, உண்மை, பொய்யென்றும், ஒருவர் சொல்லியதில் இதுவரை உண்மை இது முதல் பொய்யென்றும் அறியக்கூடிய இந்த பகுத்தறிவு இல்லாவிட்டால் மனித உருக்கொண்ட மிருகமேயல்லாது உண்மை மனிதனல்ல. மகாத்துமா காந்தி சொன்னாலென்ன ராமசாமி நாயக்கர் சொன்னாலென்ன வரதராஜுலு நாயுடு சொன்னாலென்ன உண்மையைத்தான் ஒப்புக்கொள்ள முடியுமேயன்றி ஒருவர் சொன்னதற்காக அசத்தியத்தை கைக்கொள்ள முடியாது இதுபற்றியே "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றார் பொய்யா மொழிப் புலவர்.

திரு ஈ. வே. ராமசாமி நாயக்கர் பிரசங்கம் செய்யும் பொழுதும் "நான் சொல்லுவதற்காக ஒப்புக்கொள்ள வேண்டாம்; நீங்கள் ஒவ்வொருவரும் உண்மையாராய்ச்சி செய்து அதன் முடிவை ஒப்புக் கொள்ளுங்கள்" என்று ஒவ்வொரு தடவையும் வலியுறுத்துவதை மெய்யறிவில் ஒரு பரமாணு உள்ளவனும் தெரிந்து கொள்ளாமலிருக்க மாட்டான்.

தனது உரிமையை தனக்கு கொடு என்பதை விஷமப் பிரசாரமென்றும், எல்லாப் பெருமைகளையும் ஒருவருக்கே ஒரு வகுப்புக்கே கொடுக்க வேண்டுமென்று, சொல்பவர்களை அயோக்கிய பிரசாரகர்களென்றும், சமூகத்தின் பொறுப்பற்ற மூடர்களென்றுமே சொல்வோம்.

சமூகத்தின் ஊழல்களை திருத்துவதற்கு முயற்சிப்பவர்களை விஷமப் பிரசாரப் போலி இந்துக்களென்று எழுதி யிருக்கிறார்கள். ஒரு சமயம் 'இந்துக்கள்' என்பதற்கு பாரசீக அகராதியில் 'திருடன்' என்ற பொருளைப் பார்த்த பிறகு இவர்களெல்லாம் போலித் திருடர்களேயன்றி உண்மைத் திருடர்களல்லவென்ற நிச்சயத்தின் பேரில் எழுதியிருப்பார்கள் போலும். உண்மை இந்துவல்ல, போலி இந்துவோ என்று, அதாவது உண்மைத் திருடனல்ல போலித் திருடனே என்று, அதாவது திருடனல்லவென்று தீர்மானஞ்செய்த இச்சங்கத்திற்கு மனமார்ந்த வந்தனத்தைசெலுத்தாமலிருக்க முடியாது.

நாகூரில் இராமாவதாரமானது இந்துமதாபிமான சங்கம் என்ற மறுபெயருடன் தோன்றியிருப்பதாகவும் இச்சங்கத்தின் உதவியால் இராவண வதம் செய்யப் போவதாகவும் தெரிவிக்கிறார்கள். இராம தூதர்களும் இராம சைனியங்களும் இலங்கைக்கு தீவைத்ததுபோல் இந்நாகூருக்காவது அல்லது இராக்ஷசர்கள் இருக்கும் ஊருக்காவது நெருப்புவைத்து விடுவார்களோ என்று இவ்வூர் வாசிகள் பயப்படுகிறார்கள்.

ஞான சூரியனென்றும் தங்களுடைய சங்கத்தை மிகவும் புகழ்ந்து கொள்ளுகிறார்கள். உண்மை ஞானிக்கு ஜாதி வித்தியாசம் மதவித்தியாசம், வகுப்பு வேற்றுமை, புராணம், இதிகாசம், கர்மம் கிடையாது- ஆனால் இந்த ஞான சூரியருக்கும் பஞ்சமர் முதலான தீண்டாதவர்கள் ஆகாது. ஒரு கர்மத்தின் அர்த்தம் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் அந்த கர்மத்தை கட்டாயம் செய்யவேண்டும். இதற்கு பிராமணர்கள் தான் ஐந்து ஆறுதடவை அறிவு கொளுத்தியிருக்கிறார்கள். பிராமணரல்லாதார் இன்னும் ஒருவரும் அறிவுண்டாக்க பிரசங்கம் செய்யவில்லை. இன்னும் ஞானம் பலவாயிலாக ஊட்டப்பட்டு வருகின்றது. ஞான சூரியனுக்குப்பதில் ஞான சூன்யம் என்பது மிகப் பொருந்தும்.


ஆதலின் தான் பேசும் எழுதும் வார்த்தைகளின் அர்த்தம் தெரியாமல் உபயோகப்படுத்துவதும் தன்னைத்தானே புகழ்ந்து கொள்வதுமாகிய இந்த அறிவீனச் செய்கையிலிருந்து யாவரையும் எல்லாம் வல்ல இறைவன் காப்பாராக.

எம். சூரியமூர்த்தி காரியதரிசி,
திராவிட சங்கம். நாகூர்.


## டிடக்டாவ்ஸ்

அல்லது

## துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன் மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்,

## விளம்பரம்.

### வியாபாரிகளே!

உங்களுடைய வியாபாரம் செழிப்பாக நடக்க வேண்டுமா? அப்படியானால் நீங்கள் முக்கியமான பத்திரிகைகளில் விளம்பரம் செய்தல்வேண்டும். உங்களுடைய விளம்பரத்தை எங்களிடம் அனுப்புங்கள். நாங்கள் அதை எப்படி எழுதினால் ஜனங்களின் மனதைக் கவர்ச்சி செய்யுமோ அந்த வழியில் எழுதி அழகாகப் பிரசுரிப்போம் குறைந்த விகிதம் வேண்டுமானால் நீங்கள் எங்களுக்குத் தான் எழுதவேண்டும். வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்வதே

வாஸ் அட்வர்டைஸிங் சர்விஸ்,
தபால் பெட்டி 119, மதராஸ்.

## "குடி அரசு"
### தொண்டர்களின் அறிக்கை,

இவ்வுலகில் மக்களாகப்பிறந்தவர்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்து ஜீவிக்காமல் அயோக்கியத்தனமாக பாமர மக்களிடை உயர்வு தாழ்வை கற்பித்து, கடவுள், மோக்ஷம், வேதம், புராணம் என்பதன்பேரால் பலவித தந்திரங்களால் மக்களை ஏமாற்றி வயிறு பிழைத்து வந்த தொடல்லாமல், இவ்விருபதாம் நூற்றாண்டில் ஆங்கில பாஷையை கற்றுக்கொண்டு ஒரு பக்கம் வெள்ளைக்காரர்களுக்கு திருவடி சம்பந்திகளாகவும், ஒரு பக்கம் காங்கிரஸ், சுயராஜ்யம், தேசியம் என்பதாகவும், கூச்சலிட்டு அதன் மூலம் தலைவர் பட்டத்தை தாங்கித்திரியும் அயோக்கியர்களையும் அவர்களின் வால் பிடித்து திரியும் சில சோணகிரிகளையும் தயவு தாட்சண்யமின்றிகண்டித்து மக்களின் பிறப்புரிமைக்குப் போராடும் தெய்வீக "குடி அரசை" எமது திருச்சி ஜில்லா பூராவும் பரப்புவதற்கு வேண்டிய முயற்சிகளை செய்து வருவதால் இதைபோல் ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள சுயமரியாதைத் தோழர்கள் பிரயாசை எடுக்குமாறு வேண்டுகிறோம்.

28—12—27 } திரு. இராவணதாசன்.
திருச்சி. } திரு. கலியப்பெருமான்

---

### ஒக்கலிக மகாஜன கல்வி அபிவிருத்தி சங்கம்.

அவனாசி தாலூகா காரமடை ஸ்ரீ ரெங்கநாத சுவாமி தேவஸ்தானத்தில் 1927-௵ டிசம்பர்-௴ 9-தேதியில் ஒக்கலிக மகாஜனங்கள் தமது ஜாதி முன்னேற்றமடைந்து வருவதற்காகவும் தமது சமூகச் சிறுவர்களின் கல்வி அபிவிருத்திக்காகவும் தமது சமூகத்தாரால் நடத்தலான மகாநாட்டில் மகாஜன கல்வி அபிவிருத்தி சங்கம் என்ற பெயர் கொண்ட சங்கத்தை ஸ்தாபிக்கத் தீர்மானங்கள் நிறைவேற்றி சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டு வேலையைத் துவக்கம் செய்து நடத்திவருவதால் தமது ஜாதி சமூகத்தார் அனைவரும் மேற்படி சங்கத்திற்கு தங்களாலியன்றவரை ஆதரவளித்து சங்காமனதுரிமாய் வேலைசெய்வுயைா ஒத்துழைத்து வரவேண்டுமாய் தமது சமூகத்தாரை வேண்டிக்கொள்வதாக சங்கத்தின் காரியதரிசி தெரிவிக்கிறார்.

### புது வருஷ பஞ்சாங்கங்கள்,

1. கும்பகோணம் பைண்டிங் ஆபீஸ் ஸ்ரீராம் கம்பெனியார், 2. மதராஸ் அண்ணாபிள்ளைத் தெரு வாசன் புஸ்தகசாலையார், 3. சேலம் குகை ஷாராப் வியாபாரம ஸ்ரீ தொ. வெ. சென்னிசெட்டியார், 4. தஞ்சாவூர் காஸ்லேட் வியாபாரம் சன் கம்பெனியார், 5. பாம்பிமலை ஆபரண வியாபாரம் ஸ்ரீ பி. கோபால்சாமிநாயுடு கம்பெனியார் ஆகியவர்களும் மற்றும் பலரும் நமக்கு அனுப்பியிருக்கும் தத்தம்கம்பெனியின் 1928 ம் வருஷத்திய காலண்டர்களை வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டோம்.


## மின்சார ரசம்.

### சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.

பத்தியமில்லை! மின்சார ரசம்.

அநுபானமில்லை! மின்சார ரசம்.

இதற்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம். மனிதன் தலைமுதல் கால் வரையில் வரும் எல்லா ரோகங்களுக்கும் தேவாமிருதம் போன்ற தென்பது ஜகத் பிரசித்தம். பலரின் அநுபவம். கைகண்ட மருந்து.

REGISTERED TRADE MARK MINSARA RASAM

எச்சரிக்கை:- ரிஜிஸ்டரான டிரேட்மார்க்

ரோகிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். டாக்டர்களை தேட வேண்டியதில்லை. உங்கள் காலத்தையும் சிரமத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

உண்மை யறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள்! உங்களை ஆச்சரியமுறச் செய்யும்!

கேட்லாக் இனும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

விலாசம்:- **மின்சார ரசம் கம்பெனி Ltd., சேலம்.**

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள் } மெசர்ஸ். T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ். இங்கிலீஷ் மருந்து ஷாப், வடக்குசித்திரை வீதி, மதுரை.


### தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் இளைஞர் மகாநாடு

இம்மகாநாடு தஞ்சையில் 1928-வருஷம் பிப்ரவரி மாதம் 18, 19 நாட்களில் நடைபெறும். திருவாளர் P. T. ராஜன் B. A, பார்-அட்-லா, M. L. C. அவர்கள் தலைமை வகிக்க அழைக்கப்பட்டிருக்கிறார்

வரவேற்புக் கழக உறுப்பினரின் கட்டணம் ஐந்து ரூபாய். பிரதிநிதி (Delegate) கட்டணம் ரூபாய் ஒன்று. பெண் பிரதிநிதிகளுக்கு கட்டணம் இல்லை.

தஞ்சை ஜில்லாவிலுள்ள பார்ப்பனரல்லாத வாலிபர்களெல்லோரும் வரவேற்புக்கழக உறுப்பினர்களாகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


கடிதங்கள் எழுதுவோர், காரியதரிசி, தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாத இளைஞர் மகாநாடு, தஞ்சாவூர் என்ற விலாசத்துக்கு எழுதுங்கள். காரியதரிசி

### சைவ சித்தாந்த சமாஜம், 22 ம் ஆண்டு நிறைவுவிழா.

நிகழும் பிரபவ வருஷம் மார்கழி மாதம் 15 தேதி (30—12—27) புதுவைமா நகரத்தில் கோமுட்டிவீதியில் சீகாழி கிருஷ்ணசுவாமி செட்டியார் மாளிகையில் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமையில் மேற்படி விழாவும் 16, 17, 18 ம் நாட்களில் பல அறிஞர்களின் உபந்யாசங்களும் நடைபெறும். காரியதரிசி.


### டேபில் டைம்பீஸ் இனும் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனுமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.




வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜீ. டி மதராஸ்.

---

### 10-௵ உத்தரவாதம்.



விலை ரூ. 20 முதல் ரூ. 100 வரை

மிக்க உயர்தரமானது. நீடித்து உழைக்கக் கூடிய ஸ்வர சுத்தம், சாரவை, கமக்கம், இனிமையுள்ள நாதம் பொருந்திய ஆர்மோனியங்களும், மற்றுமுள்ள சங்கீதக் கருவிகளும் உத்திரவாதத்துடன் குறைந்த விலைக்கு நம்மிடம் கிடைக்கும். முழு விவரங்களடங்கிய கேட்லாக் வேண்டுமானல் அனுப்பப்படும்.

பழனி கம்பேனி, கல்கத்தா ஆர்மோனியம் வியாபாரி 114 தங்கசாலை தெரு, சென்னை.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜ்யம் தானே வந்து சேர்ந்துவிடும். சுயமரியாதையை அனைவரும் பெற்றாலன்றி கருதிய கருமங்கள் நிறைவேறல் அரிது. சகோதரத்வம், சமத்வம், சுதந்திரம் ஆகியவற்றின் மாறுபெயர் தாங்கியுள்ள 'சுயமரியாதை' யைச் சகலரும் கடைப்பிடித்து நிற்கவேண்டுவது அவசியமும் அறிவுடைமையுமாகும் என்று சாற்றுவது எனது கடன். தீண்டாமையை அகற்றி, பெண்ணுக்குச் சமம் கொடுத்து இந்து முஸ்லீம் ஒற்றுமையை உண்டாக்கிச் சுயராஜ்யம் தரவல்லது சுயமரியாதை, சுயமரியாதையே, என்று ஓயாது சொல்வதிற்கு அன்பர்கள் மன்னிப்பாராக. மக்கள் சுயமரியாதை பெறுவதற்குமுன்னம் ஒரு வேளை சுயராஜ்யம் கிடைத்தாலும் அச்சுயராஜ்யம் வந்த சில தினத்திற்குள் திரும்பிச் சென்று விடும் என்பது எனது அபிப்ராயம். சுயராஜ்யத்திற்கு ஆணிவேர் சுயமரியாதையாகும். ஆகவே சுயராஜ்யம் என்ற மரத்திற்கு முதலில் அம்மரத்தின் ஆணி வேரான சுயமரியாதையைப் பலப் படுத்தல் முக்கியமாகும்.

இக்காலே பொதுவாய்ப் பரதகண்டத்திலும் முக்கியமாய்த் தமிழ் நாட்டிலும் சுயமரியாதை நாடோறும் வளர்ச்சி யுற்று வருவதை யான் கண்டுகளிபேருவகை கொள்கிறேன். இன்னும் ஒரு சில ஆண்டுகளில் தமிழ் நாடு முழுவதும் சுயமரியாதை பெற்றுவிடும் என்பதில் சிறிதும் ஐயமின்று. இன்று இவ்வளவில் நின்று கொள்கிறேன். பிழைகளுளவேற் பொறுக்க.

சுயமரியாதை ஓங்க! நாடு வாழ்க!!

## கிருஷ்ணகிரி போர்டு ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயரின் கொடுங்கோன்மை.

மேலே கண்ட பார்ப்பனர், தம்மை ஓர் மாணவன் செருப்பால் அடித்ததாக குற்றம் சாற்றி, அவ்வழக்கு கிருஷ்ணகிரி சப் மேஜிஸ்டிரேட் கோர்ட்டில் நடந்து, கடைசியில் அம்மாணவன் பக்கம் ஜெயமாயிற்று. அத்தலைமை உபாத்தியாயர், தன்னை செருப்பால் அடிபடும்படி செய்ததற்குத் தற்சமயம் இருக்கும் 11-ம் வகுப்பு மாணவர்களில் பெரும்பாலரே யென்றும், அவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்லத் தனக்கு இஷ்டமில்லை யென்றும், அவர்களுக்கு என்ன விதமான தண்டனைகளை கொடுக்கவேண்டுமோ அந்த விதமான தண்டனையைக் கொடுக்க சமயம் வாய்க்கு மென்றும், அநேக மாணவர்களின் முன்னிலையில் சொல்லியிருக்கிறார். ஆகையால் இப்பொழுது சமீபத்திலிருக்கும் (Selection) பரிக்ஷையில் தம்மைத் தேர்ந்தெடுக்காமல் போய்விடுவார்என்றுபயங்கொண்ட, ஒன்றுமறியாத மாணவர்கள் வேறே இடங்கட்குச் சென்று (selection) பரிக்ஷையில் தேர்தல் பெறுதற்கு திடச்சித்தம் உடையவர்களாயிருக்கிறார்கள். இப்படி வருந்தி ஊரைவிட்டுச் செல்லும் மாணவர்களின் பரிதாப நிலையை மகா-ள-ள-ஸ்ரீ ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்களும், மற்றும் கல்வியிலாக்கா தலைவர்களும் கருணையுடன் அறிந்து மேற்கண்ட தலைமை உபாத்தியாயரைச் சரிவர விசாரணை செய்து மாணவர்களுக்கு நற்கதியை அளிப்பாரென வேண்டுகிறோம்.

மாணவர்களின் நிலையைக்கண்ட பரிதாபி.

## சுயமரியாதை.

வெண்பா

வேதமென்றுஞ் சாதியென்றும் வேறுபிரித் திங்குநமைப்
பேதப் படுத்தும் பிராமணரை—வாதித்து
நாயை நிகர்த்துழைக்கும் தன்யன் இராமச்சாமி
நாயக்கர் கொள்கை நலம் 1

அந்நாள்போ லென்றும் அடிமைவாழ் வெய்தாமற்
றன்னால் சமத்துவத்தை தானடைய—உள்ளபடி
நாயக்க ரளித்த நல்லுணர்ச்சி பெற்றதுநந்
தாய்நாடு செய்த தவம் 2

வெள்ளையர்க்கும் வேதியர்க்கும் வேலைசெய்ய வோ அடிமைப்
பிள்ளைகளாய் ஈசன் பிறப்பித்தான்—உள்ளபடி
வாழ்ந்திருந்த பெரியோர்பால் வழிவுவளர்த் தோர்களெதிர்
தாழ்ந்திருக்க தலைவிதியோ தான் 3

திகழுங் கடவுட் டிருமுன் னுயிர்கள்
இகழப் பெறுதல் இனிதோ—புகழும்
இத்தகைய வோர்மதத்தை எம்மதமென் றேயழைப்பாம்
உத்தமர்காள் சொல்வீர் உவந்து 4

முடி அரச ரெல்லோரும் முன்வந் தவக்குங்
குடி அரசின் இன்பமொழிக் கொண்டுத்—திடம் பெறுவோ
மானால் தடையின்றி யம்புவியி லேகிடைக்குந்
தானே சுயமரியாதை 5

ஏ. எம். நடராஜன்

## மலாய்நாட்டு கடிதம்

ஜய 1927 ஞு நவம்பர்மீ 30உ காலஞ்சென்ற எனது பாட்டியம்மை நஞ்சம்மாள் அவர்கள் நயவஞ்சகர்களாய பார்ப்பனரின் போதனைக்குள் அகப்பட்டு 'சிவதிட்சை' பெற்றவர்களாக இருந்தும், சுயமதிப்பை முன்னிட்டு 'திட்சை இறக்குதல்' என்னும் மூடத்தனமான வழக்கத்தை விட்டொழித்து, பார்ப்பனர்களை கொண்டு யாதொரு கிரிகைகளும் நடத்தாமலும், ஆபாசமான தப்புதாள மில்லாமலும் பஜனை கோஷ்டியுடன் அடக்கஞ் செய்யப்பட்டு 11-ம் நாள் யாதொரு பார்ப்பன கிரிகைகள் இல்லாது சுமார் 300 ஏழைப் பரதேசிகளுக்கு அன்னமிடப்பட்டது. சுயமரியாதையுடைய எனது இந்து சகோதரர்கள் யாவரும் விழித்தெழுந்து நயவஞ்சகர்களின் சூழ்ச்சிக்குள்ளாகா திருக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

R. G. குருநாதன்,
F. M. S. Railway, Ipoh.

## வேண்டுகோள்.

சீர்திருத்தத்தை விரும்பி அதனைக்கடைப்பித்தொழுகும் சங்கங்கள் கழகங்கள் வாசகசாலைகள் ஏனைய பொது ஸ்தாபனங்கள் யாவும் தங்களது முழு விலாசங்களையும் அடியிற் கண்ட விலாசத்திற்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

காரியதரிசி,
ஹிந்துமதாபிமான சங்கம், காரைக்குடி,

## இவ்வாரத்தில் பிராமணியத்தையும் புரோகிதத்தையும் ஒழித்த வீரர்கள்.

நாகூர், திருவாளர்கள்,

1 டி எஸ் அப்பாசாமி பிள்ளை
2 பி பழனியாண்டி செட்டியார்.
3 ஏ வெள்ளவாரண செட்டியார்
4 எம் பக்கிரிசாமி செட்டியார்
5 டாக்டர் என் சிங்காரவேலு
6 என் தியகராஜன்
7 எம் சூரியமூர்த்தி
8 எஸ் சூரியமூர்த்தி
9 எஸ் எம் கனகசபை பிள்ளை
10 எஸ் ரெத்தினம் பிள்ளை
11 கே நீலகண்ட செட்டியார்
12 கே பாலைப்ப செட்டியார்
13 ஆர் கோவிந்தசாமி பத்தர்
14 கா கு நீலமேகம் பிள்ளை
பஞ்சகார தெரு, கும்பகோணம்
15 அ ஆறுமுகம் பிள்ளை
கூத்தூர், நாகை தாலூகா
16 சா கோவிந்தசாமி பிள்ளை
தெற்குத்தெரு, தஞ்சை
17 அ நாராயணசாமி
பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்
சாக்கோட்டை
18 சி சீனிவாச நாயக்கர்
ரத்தின வியாபாரம், சாக்கோட்டை
19 சி த சிதம்பரம் பிள்ளை
மலம்பட்டி, கிளவளவு
20 லக்குமுத்து நாயக்கர்
சிறுகுடி, மேலூர் தாலூகா

# Notification B.

It is hereby notified under Sub Section (3) of Section 10 of the Madras Town Planning Act 1920, that the Municipal Council Coimbatore, passed the following resolution at-its meeting held on 18—11—1927.

"Resolution No. 484 dated 18—11—27.—No objection or suggestion having been received during the period for scheme Nos. 1, 2 & 4 and the Government in their order No. 831 P. H. Mis dated 11—6—26 having sanctioned the inclusion of built up areas in the scheme Nos 1 and 2, it is hereby finally resolved to make or adopt the scheme Nos. 1, 2 and 4 without any modification".

2 A copy of the plan of the area proposed to be included in the scheme (Map—B) may be inspected at the Municipal Office during office hours on all working days.

Coimbatore, }
5—12—27. }

(Sd) C. S RATHNASABAPATHY,
Chairman, C M. C.

## Boundaries of the scheme.

### *No. 1—Red Field scheme*

NORTHERN BOUNDARY—Avanashi road from North-west corner of S. F. No. 221 to North-east corner of S. F. No. 198.

EASTERN BOUNDARY—Puliakulam road from North-east corner of S. F. No. 198 up to northern-most corner of S. F. No 263.

SOUTHERN BOUNDARY—Puliakulam road from Northern-most corner of S. F. No. 263 up to South-west corner of T. S. No 642.

WESTERN BOUNDARY—Alexander road from South-west corner of T. S. No. 642 up to North-west corner of T. S. No. No. 643, Race course road from South-west corner of T. S. No. 638 up to South-west corner of T. S. No 635, western boundary of T. S. Nos. 635, 634 and S. F. No. 212, 218 and then south and west of S. F. No 211.

The extent of the area is about 317 acres.

### *No. 2—Ramanathapuram scheme*

NORTHERN BOUNDARY—Northern boundary of Puliakulam road from the South-west corner of S. F. No. 13 upto the northern most corner of S. F. No 268, Northern boundary of the itteri leading to Sowaripalayam from the South-west corner of S. F. No. 447-A to south-east corner of S. F. No. 515.

EASTERNBOUNDARY—Municipal limit commencing from the South-east corner of S. F No. 515 to south-east corner of S F No. 174.

SOUTHERN BOUNDARY—Trichinopoly or Ramanathapuram road from the South-east corner of S F. No. 174 upto South-east corner of T. S. 675.

WESTERN BOUNDARY—Eastern boundary of T. S No. 675 commencing from the western boundary of S. F. No. 424 upto the North-western boundary of S. F. No. 259.

The extent of the area is about 268 acres.

### *No. 4 Scheme—In new Ward Nos. 6, 7 and 19*

NORTHERN BOUNDARY—Cross cut road from junction of Sathyamangalam road upto Mettupalayam road eastern boundary of the Mettupalayam road upto the point opposite to Cowley Brown road, Cowley Brown road upto its junction with Thadagam road.

EASTERN BOUNDARY—East by the Sathyamangalam road, Northern boundary of S. F. No. 70, east and south of S. F. No. 71, west of Brahmin Extension, east and south of R. S. No. 97 east of R. S. No. 98, north and east of T. No. 10 up to its south-east corner.

SOUTHERN BOUNDARY—South of T. S. No. 10, east and north of the compound wall of the Kaleeswarar Mills in R S F No. 95/1, east and north of T S No. 1—A 1 and 2, then crossing the Railway line south of R S No. 263 (Railway line) east of T S No. 32—B up to the point opposite to the north-east corner of Cotton Spinning and Weaving Company Mill componnd, north of the compound wall of the Cotton Spinning and Weaving Company Limited, south and west of T S No. 22, south of T S Nos. 16 and 17 up to Mettupalayam road, west of Mettupalayam road, up to Wedderburnpatta street, No. 4, north of Wedderburnpatta street No. 4 up to east side of T S No. 2191, east and south of T S No. 2191 and 2188, south of T S Nos. 2178/2 and 2179/1 and then due west to meet Thudagam road.

WESTERN BOUNDARY—Thadagam road.

The extent of the area is about 690 acres.

(Sd.) C. S. RATHNASABAPATHY,
Chairman C. M. C.

## கோவை ஜில்லா கொடுவாய் செங்குந்த வாலிபர் சங்கம்.

14-12-27 பிரபவ-ஸு கார்த்திகை-மீ 29-தேதி புதன்கிழமை மாலை 7-30 மணிக்கு கொடுவாயில் மு. ப. முத்துசாமி முதலியார் தலைமையின் கீழ் சுயமரியாதைக்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும் வாலிபர் கூட்டமொன்று கூட்டப்பட்டு ஷை சங்கத்திற்கு திரு. என். கே. அங்கப்ப முதலியார் தலைவராகவும், திரு. எஸ். டி. ரத்தினசாமி முதலியார் காரியதரிசியாகவும் ஏற்படுத்தி சங்கம் நியமிக்கப்பட்டது.

M. P. வேலுசாமி.

4 ம் பக்கத் தொடர்ச்சி

படாதிருக்குமானால் தான் நன்று" என்று திருவள்ளுவர் கூறுவதனாலும் இல்வாழ்க்கையின் சிறப்பை யறியலாம். அதுவும் என்பதற்குத் துறவறமும்என்று பரிமேலழகர்பொருள்கூறியிருக்கின்றார். இவர் கருத்துப்படி ஆராய்வோமானால், அறம் என்று சொல்லப்படுவது இல்வாழ்க்கையே யாகும். துறவறம் உயர்ந்ததாயினும் பிறனால் பழிக்கப்படாதிருக்குமானால் தான், நன்று. பழிக்கப்படுமானால் தீதாகும். இல்வாழ்க்கை பிறனால் பழிக்கப்படுமாயினும் நல்லதாகும்" என்று பொருள் கூறக்கிடப்பதையும் உணரலாம்.

இல்லறத்தில முறைப்படிவாழ்கின்றவன் மகனேமானிடனேயல்லனும் அவன்செய்தநற்காரியங்களால்வானவரையொப்ப மதிக்கப்படுவான்என்று திருவள்ளுவர் கூறுகின்றார். இதனை (10) "இவ்வுலகில் இல்லற வாழ்க்கையில் முறைப்படி வாழ்கின்றவன், வானுறைவதாகச் சொல்லும் தேவர்களையொத்தவனாகஎண்ணப்படுவான்" என்றுகூறுவதனால் அறியலாம்.

தமிழ் நூல்கள் பெரும்பாலும் உலக வாழ்க்கையையே சிறப்பித்துக் கூறுமென்பதைத் திருவள்ளுவரும் தமிழரும் என்ற முதற் கட்டுரையிலும் குறித்துக் காட்டினோம். இவ்வில்லற வாழ்க்கையென்பதனாலும், உலக வாழ்க்கையின் மேன்மையைப் பற்றித் திருவள்ளுவர் எவ்வளவு பாராட்டிக்கூறுகின்றார் என்பதனைத் தெளிவாயறியலாம். ஆரிய நூல்களில் துறவறத்தைப்பற்றி மிகுதியாகக்கூறப்படும். திருவள்ளுவரும் துறவறத்தைப்பற்றிக் கூறினாராயினும், இல்லறத்தைப்போல அவ்வளவு சிறப்பாகக்கூறவில்லை. ஆகவே இல்லறமே எல்லாவற்றினும் சிறந்ததாகும்.


## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd.

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

## சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் பொட்டோ கார்டுகள் படுக்கையறையைச்சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரெஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷை கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

ஸ்ரீ: கிருஷ்ண ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதராஸ்.

## இனாம்! 1928-வருஷ் காலண்டர் இனாம்!
## அற்புதமான வேலைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு, செயின், அரைஞாக்கொடி, கெங்காதரக் கொடி, பீலி வகையறாக்களும், இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், தோடு வகையறாக்களும், அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலைமானம் பட்டு வேஞ்சுகளும், வெண்பட்டுவகையறாக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவிணி 1, 2, 3 நெ. வேஞ்சுகளும், இன்னும் பலவித தினுசுகளும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விலைகளை குறைத்து இருக்கிறோம். வேண்டியதற்கு ஆர்டர் எழுதினால் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்

விலாசம்,
தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்
சறுப் & ஜவுளி வியாபாரம்
குகை, சேலம். (S. India)

தந்தி விலாசம் "சராப்" சேலம்

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொடுத்தும், இதைப்போன்ற அநேக புத்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால்தயார்செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், நிகரற்றதும், நற்சாட்சியும், ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும், சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாட்சிப் பத்திரம் வாங்கப் பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள

## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)



வெளி வந்து சுமார் 2000 காப்பிகள் இரண்டு வாரங்களுக்குள் பறந்துபோய்விட்டன. உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்று தான். இது மாதர்களுக்கும் வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இப்பதிப்பில் மிகவும்சிரமப்பட்டு அனுமுதல் 3,000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்குப் போடப்பட்டிருக்கிறது. எங்கள் ஆங்கில ஆசானைப்போல் பலபோலிப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆங்கில ஆசான் என்ற பெயர் டார்த்தும் இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள். உண்மையான ஆங்கில ஆசான் இதுதான்.

800 பக்கம் முழு காலிகோபயிண்டு விலை ரூபாய் 2 வி. பி. தபால் செலவு அணா 8

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்

(8-ம் பக்கத் தொடர்ச்சி).

வில், தொழிலில், போர்முனையில் வேலை செய்பவனுக்கும் தினமும் தீயில் சோறுண்டு திண்ணையில் புரளுகிறவனுக்கும், வண்டியிலேபோய் வண்டியிலே வருகிறவன், பங்காவின் கீழ் இருப்பவன், தின்றதை ஜீரணம் பண்ணாமல் நின்று நிலையிலேயிருப்பவர்களுக்கும் சிலம்பவித்தைபழகுகிறவன், பந்தடிப்பவன், படைவீரன் இவர்களுக்கும் முகவசீகரத்தில் வித்தியாசமிருக்கலாம். உயர்வு தாழ்வென்ன? பூர்வீக ஆரியர்களுக்கும் இந்தப் பார்ப்பனர்களுக்கும் லக்ஷணம் ஒன்றாகுமா? ஆப்கானிஸ்தானியரும், ஆங்கிலேயர்களும் ஆரியர்களென்றே பூர்வீக இந்து சாஸ்திரத்தை மெச்சின அய்யங்கார் சொல்லும் வெள்ளைக்காரர்கள் சொல்லுகிறார்கள். இவர்கள் முக வசீகரங்களெல்லாமொன்றுதானா? வடதேசத்துப்பார்ப்பான் மீசைவைத்து குடாக்கு குடித்து புகை விடுகிறான். தென் தேசத்துப்பார்ப்பான் மீசையில்லாது புகையிலை போட்டு எச்சில் துப்புகிறான். முகவசீகரம் வித்தியாசமாகத்தானிருக்கிறது. பணக்காரன் வீட்டுப் பிள்ளை மக்காயிருந்தாலும் 'என்ன சாந்தமய்யா! என்ன சாதுத்தன்மையுடையது இந்த முகம்' என்பதுபோல பாப்பான் மதக்குறி அவன் நெற்றியிலிருப்பதால் பார்ப்பான் மற்றவர்களை இழிவாக நினைத்த வாடிக்கையும் சேர்ந்து பாப்பான் முகத்தில் ஒருவித வசீகரமிருப்பதாகத் தோன்றலாம். ஜட்ஜ் கிருஷ்ணன், ஜட்ஜி தேவதாஸ், ஜட்ஜி வெங்கட்ட சுப்பராவ், ஜட்ஜி வி. வி. அய்யங்கார் இவர்களெல்லாம் ஒரே இடத்தில் உட்கார எந்த முகவசீகரமும் தடுக்கவில்லையே. ஜப்பான் வசீகரம் தன் யூரை தானே ஆளுகிறது. துருக்கி வசீகரம் மதத்தொல்லையைமாற்றுகிறது. வெள்ளைக்காரன் வசீகர உலகத்திற்கெல்லாம் தானே கர்த்தா வென்கிறது. இட்டாலி வசீகரம் எல்லாதேசத்தையும் இழுக்கிறது. அமெரிக்கா வசீகரம் எல்லா தேசத்திற்கும் நாகரீகத்தை அனுப்புகிறது. பாப்பார வசீகரம் எல்லாரையும் அன்னிய மதத்திற்கு ஓட்டி அவர்களால் அடிபடச் செய்கிறது. பூர்வீக காலத்து வசீகர வர்ணனை வி. வி. அய்யங்கார் சொல்லுவதுபோலல்ல. அவன் மீசையில் எலுமிச்சம்பழம் நிற்கும். சிங்கப் பார்வை, புலியின் தோற்றம், கொம்பன் ஆனையின் கெம்பீரம் காளையின் நடையைப் பழிக்கும் நடை, கருங்கண்ணும் செங்கண்ணும் சேர்ந்த முகம். ரோம் தேசத்து பூர்வீக மனிதர்களின் தேகக் கட்டான தசை அடுக்கை காட்சி சாலையில் வைத்திருப்பது போல் தேகக்கட்டையும் பயங்கர முகத்தையும் காட்டுவதே வசீகரமாக இருக்கிறதே ஒழிய மார்பிற்குமேல் வயிறு ஒரு முழம் தள்ளிக்கொண்டு பன்னிரண்டாறு வேஷ்டியும் போதாத வசீகரத்தைக்கண்டு எந்த தேசத்தாரும் மதித்ததில்லை. அப்பேர்ப்பட்ட புருஷர்களைப் பார்க்கவேண்டுமானால் தாழ்ந்த ஜாதியார் என்று சொல்லப்படுபவர்களில் தான் பார்க்கமுடியும். அவர்களைத் தள்ளிப் பார்ப்பர வசீகரம் வந்ததும் தேசமும் வீழ்ந்தது. அதற்குப் பின் தான் படை எடுப்பும் உண்டாயின. இவர் கும்பிடும் தெய்வமான ராமர் குரங்கு முகத்திலும், ராட்சதன் முகத்திலும், வேடன் முகத்திலும், பட்சி முகத்திலும் எந்த வசீகரம் கண்டார். ஸ்ரீ கிருஷ்ணன் தன்கடமையைச் செய்கையில் அர்ச்சுனன் செருப்பில் என்ன வசீகரமிருந்தது. விஷ்ணுவின் அவதாரமான புத்தன் நொண்டி ஆட்டுக்குட்டியில் என்ன வசீகரத்தைப் பார்த்தார். இவர்கள் ஆச்சாரியரான ராமானுஜர் வில்லிதாசரான மல்லசெட்டி முகத்திலோ தன் குருநாதன் உபதேச மொழிகளை கோபுரத்தின் மீதிருந்து எல்லாரையும் எடுத்துக்கொள்ளச் சொன்னதிலோ அவர்கள் முகத்திலோ ஏதாவது வசீகரமிருந்ததைக்கண்டாரா?

(தொடரும்)



நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஒளஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

## பழனி. சி. எம். சாமி மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரியமஹானின் முறை. அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும், இல்வாழ்வில் அதிஅற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:— தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையைஎழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

## குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷயரோகமும் நீங்கும். தருக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி.—நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பகோருகிறேன். கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

## குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்புஇவைகள்குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

## சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

**C.மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னைபிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி43அரமனைக்காரத் தெரு ஜி.டி.சென்னை

மிருத்யுஞ் ஜெய ஸம்ரக்ஷணிய வைத்தியசாலை, மாயவரம்.

அமிர்த சஞ்சீவி ரசாயனம். விலை சேர் 1-க்கு ரூ. 4.

இது சகல வியாதிகளுக்கும் அமிர்தம் போன்ற தக்க கைகண்ட மருந்து. விசேஷமாய் காஸம், க்ஷயம், பிரமேகம் (நீர் ரோகம்) குன்மம், சூலை, குஷ்டம், ரணம், மேகநீர், சொரி, கிரந்தி வெட்டை இவைகளுக்கும், ரெத்தம் குறைந்து இந்திரியம் கீத்துப்போய் இரவில் தூக்கமின்றி தவிப்பவர்கட்கும் இன்றியமையாதது.

காமகல்பக ரசாயணம். விலை சேர் 1-க்கு ரூ. 7—8—0.

இது நித்யம் இரவில் சாப்பிட்டு பால் சாப்பிட்டால் சுக நித்திரையும் சம்போக சாமர்த்தியமும் உண்டாவதுடன் மனதிற்கு சந்தோஷத்தையும் தேகத்திற்கு பலத்தையும் கொடுக்கும். தவிர அஜீர்ணம், கிரகணி, குன்மம், சூலை, பித்தவாயு, நீர் ரோகம், வெட்டை, காஸம், க்ஷயம் முதலிய வியாதிகளுக்கும் உத்தமமான மருந்து.

DR. T. S. நாயர், M. S. வைத்தியசாலை, மாயவரம்.

## திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமான கதர்ஜவுளிதினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

நீங்கள் நெடுநாட்களாய் எதிர்பார்த்திருந்த

## இரகசிய புஸ்தகம் தயாராகிவிட்டது.

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

அழகான பயிண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் நேர்த்தியான அச்சு.

நல்ல'கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

## இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1. துறவிகளின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை என் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. ஒவ்வொரு தேசத்திலும் நாணம் எந்நிலைமையிலிருக்கிறது?
9. நாம் என் உடைதரிக்கவேண்டும்?
10. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
11. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
12. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
13. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
14. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
15. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
16. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
17. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?
18. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?
19. அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
20. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
21. சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
22. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
23. வாழ்க்கையில் முக்கியமாய் பெண்கள் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள்.
24. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
25. மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
26. கருவிலிருப்பது ஆணு பெண்ணு என்று எப்படி அறிந்து கொள்வது?
27. தம்மனோபாவனையின்படி ஆண், பெண் உற்பத்தி செய்து கொள்ளும் தன்மை.
28. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.
29. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
30. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
31. சுகப்பிரசவத்திற்கு வேண்டிய மார்க்கங்கள். பிரசவித்த குழந்தையைப் பிரசவ காலத்தில் ரக்ஷிக்கும் கிரமம்.
32. முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
33. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானல் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விவரம்.
34. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் என் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவதெப்படி?

35. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினல் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனு, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அபியாயங்கள் செய்கின்றனர்? சிசு கொலை அநியாயம்.

36. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனெருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானல் அவன் எப்படி சாமார்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்.

37. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள். ஏனென்றால் அங்கும் ஏமாற்றமடையாமல் இன்பங் காண்பதற்கு அநேக வழிகளுண்டு.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான போன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்துக்கு உடனே எழுதவும்.

குறிப்பு:—வெளி நாட்டார் கண்டிப்பாய் முன்பணம் அனுப்பவேண்டும்.

**வாஸன் புஸ்தகசாலை,**
**தபாற் பெட்டி நெ. 119**
**97. அன்னபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.**

அநேக ஏராளமான நற்சாட்சிகளும், தங்கமெடல்களும், ஏராளமான பரிசுகளும் பெற்று, டாக்டர்களால் கைவிடப்பட்ட வியாதிகளை எல்லாம் சௌக்கியம் செய்த நமது முதல்தர தேவ ஔஷதங்கள். உலக மெங்கும் புகழ்ந்து கொண்டாடி வரப்படுகிறது.

## தாது புஷ்டிக்கு அசல் தங்க பற்பம்.



டிரேட் மார்க்

அதிக வயதாலும், பலஹீனத்தாலும், பலவித துர் அப்பியாசத்தாலும், சோர்ந்து போனதும் இழந்து போனதுமான ஆண்மையைக் கெட்டிப்படுத்தி, சப்த தாதுக்களுக்கும் வலுக் கொடுத்து இல்வாழ்க்கையில் அதிக இன்பத்தைஉண்டு பண்ணி புத்திர சந்தானத்தைக் கொடுப்பதில்இதற்கு மிஞ்சிய ஔஷதம் இல்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். தங்க பற்பத்தை மகா வில்வாதி லேகியத்துடன் அனுபானமாகச் சேர்த்துச் சாப்பிடவேண்டும். முதல் நெ. பற்பம் 50 நாள் மருந்து விலை ரூ 36 [2-ம் நெ. பற்பம் 50 நாள் மருந்து விலை ரூ 20.] அனுபானத்துக்கு மகா வில்வாதி லேகியம் 1 டின் விலை ரூபாய் 10. (தபால் செலவு பிரத்தியேகம்,)

## அசல் வெள்ளி பற்பம்.

(உத்திரவாதம்) நமது அசல் வெள்ளி பற்பம் நாட்பட்ட அஸ்தி வெட்டை, நீரோடுஇந்திரியம் உடைந்து விழுதல், அதில் ஈ, எறும்பு மொய்த்தல். சிறுக்கிருமல், தும்மல் விழுதல், வெட்டை வாய்வு, இடுப்பில் வாய்வு தங்கியிருத்தல், தேகம் இளைத்து சதா ஜுரம்போல் சூடுதாங்கி யிருத்தல், கால், கை, கண் முதலான இடங்களில் எரிச்சல் உண்டாகி தலைமாற்றி சுற்றல் இவைகள் கண்டிப்பாய் நிவர்த்தியாகும். தேகத்திற்கு நல்ல பலத்தையும் தாது புஷ்டியையும், நல்ல இரத்த ஓட்டத்தையும் உண்டுபண்ணுவதில் இதற்கு நிகரான மருந்துகள் கிடையாது. இதை மதனகாமேஸ்வரி லேகிய அனுபானத்தில் வைத்துச் சாப்பிடவேண்டும். ஒரு மண்டலம் (48 நாள்) உபயோகிக்கக்கூடிய பற்பம் விலை ரூ 15 [அரை மண்டலம் 24 நாள்] உபயோகிக்கக்கூடிய பற்பம் விலை ரூபாய் 7—8—0, ஒரு மண்டல மதனகாமேஸ்வரி லேகியம் 2 டின் விலை ரூ 16—0—0 (தபால் சார்ஜ் பிரத்தியேகம்.)

## நீரழிவுக்கு அப்ரேக் செந்தூரம்.

வயது 40க்கு மேல் வாழ்க்கைகுள்ள கருவி கரணங்கள் சற்று இளகும். அப்போது மூத்திரப்பை பலனற்று ஜனேந்திரியம் நீற்றுப் போய் இன்னும் பல காரணங்களால் மூத்திரப் பெருக்கு உண்டாகி சரீரம் மெலிந்து ஜீவனை விட்டு விட வேண்டியிருக்கும் நிலைமையில் நீரழிவு வியாதியினால் இறந்துபோகிறார்கள் என்கிறார்கள். நீரழிவுக்கு நமது அப்ரேக் செந்தூரம் சாப்பிட்டால் அது குண்டிக்காய் மூத்திரப்பை முதலிய கருவிகளுக்குப் பலம் கொடுத்து ரட்சிப்பதுடன் நீரழிவினால் ஏற்படும் சகல கோளாறுகளையும் நிவர்த்தி செய்து நல்ல மேனியை உண்டுபண்ணி சந்தோஷத்தில் வைத்து வளர்த்தும். அதிமதுரப்பால் ரசாயனத்தில் சாப்பிடவேண்டும். 24 நாள் மருந்து [அனுபான ரஸாயனத்துடன்] விலை ரூ 16. தபால் செலவு வேறு

## தாளக பற்பம்.

நாட்பட்ட காசம், இருமல், க்ஷயம் ஈளை, கோழை, கஷ்ட சுவாசம் முதலிய ரோகங்களை வெகுசீக்கிரத்தில் குணப்படுத்தும். முதல் நெ. பற்பம் புட்டி 1க்கு விலை ரூ 7—0—0. அனுபானம் லேகியம், கண்டங்கத்தரி அல்லது தூதுவளை ரஸாயனம், 10 நாளைக்கு விலை ரூ. 3—8—0 தபால் செலவு வேறு.

நற்சாட்சி.— பழனி சற்குரு மகாதேவ ஸ்வாமிகள் சித்த ஆயுள் வேத பண்டிதர் ஸ்வாமிகள் தயார் செய்யும் தங்கம், தாம்பரம், வெள்ளி, பவளம், முத்து, அயபற்ப செந்தூரங்கள் மிகவும் உயர்ந்த முறைகளால் தயார் செய்யப்படுகின்றன. சுமார் 1 வருஷ காலமாக என் பேத்திக்கு இருமல் வியாதி கண்டு கபத்தினாலும் சுவாசத்தினாலும் கஷ்டப்பட்டும் அநேக டாக்டர்களால் கைவிடப்பட்ட வியாதியை ஸ்வாமிகள் பிறர் ஆச்சரியப்படத்தக்க விதமாய் வெகு ஜல்தியில் சௌக்கியம் செய்து விட்டார். இவருடைய அபார சக்தியை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்வதில் மிகவும் சந்தோஷ முள்ளவனாயிருக்கிறேன். எல். கல்யாணராமய்யர், ரிடயர்டு தாசில்தார் அண்டு சிவகிரி திவான்.

## நாக பற்பம்.

மூல சம்பந்தமான எவ்வித வியாதியாயிருந்தாலும் சரி வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும். ஆபரேஷன் வேண்டியதில்லை பெருமுறை மருந்து முதல் நெ. பற்பம் புட்டி 1 க்கு விலை ரூ 10. [தபால் செலவு வேறு]

நற்சாட்சி:— பழனி வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ வி. கோபால்சாமி அய்யர் சொல்வதை கவனியுங்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் "பழனி சதானந்த மெடிக்கல் ஹால்" ஸ்ரீமான் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள் தாம்பிர பற்பத்தாலும் மற்றும் அனேக பற்பமுறை, லேகியபோக்கு, செந்தூர வைப்பு, தைலதினுசு இவைகளால் பலவிதமான குஷ்டரோகங்களும் இன்னும் அநேகவிதமானரோகங்கள் சொஸ்தப்பட்டுவருவதும், ஆண்டிப்பட்டி ஜமீன்தார் ஸ்ரீமான் ஆர். எம். பிடி. பேத்தாச்சி செட்டியார் அவர்கள், விசாகப்பட்டணம் மகாராணி அம்மை Ceylon Supreme Court Sir Kumarasami Mudaliar Avl. K. C. I. E. Ceylon ராமாலாலா தத்துப் புத்திரர், கனகசபை மகாராஜா அவர்கள். சிவகிரி திவான் ஸ்ரீமான் கல்யாணராமய்யர் அவர்கள், பென்ஷன் தாசில்தார். காரத் தொழுவு (Land Lord) சுப்பம்மாள் இவர்களால் கொடுக்கப்பட்ட தங்க மெடல், மரகத மெடல் முதலியவைகள் பெற்றிருப்பது நான் நேரில் அறிந்த விஷயம். எவ்வித ரோகஸ்தரும் தாமதம் தாழ்வு அன்னியில் ஸ்வாமிகள் அவர்களிடம் குணம் பெற்றுக் கொள்ள விரும்பி என் அபிப்பிராயத்தை வெளியிடுகிறேன். 18—1—25 (ஒப்பம்) வி. கோபாலசாமி அய்யர் வக்கீல் பழனி.

நமது தாம்பர பற்பத்தின் விளம்பரத்தை அடுத்தவாரம் பிரசுரமாகும் பத்திரிகையில் பார்க்கவும். விவரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

மலாய் நாட்டிலுள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவும்.

# ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள்.

சதானந்த மெடிகல் ஹால், பழனி. மதுரை ஜில்லா, தென்னிந்தியா.

தந்தி விலாசம்:— "சற்குரு" பழனி

Tel.—address "Sarguru" Palni

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.